ஒரு கிளியரிங் கார்பரேஷன் மூலம் தீர்க்கப்படும் எந்த வர்த்தகமும் ஒரு 'மார்க்கெட் ட்ரேட்' என அழைக்கப்படுகிறது. இந்த வர்த்தகங்கள் அங்கீகரிக்கப்பட்ட பங்குச் சந்தைகளின் தளங்களில் பங்குதாரர்களால் செய்யப்படுகின்றன. ஒரு 'ஆஃப் மார்க்கெட் ட்ரேட் ' என்பது இரு நபர்களுக்கு இடையே நேரடியாக நிகழும் வர்த்தகமாகும். இதில் கிளியரிங் கார்பரேஷனின் பங்கு எதுவும் கிடையாது. மற்ற எந்த ஐ.ஐ.ஐ.என் ஐயும் வேறு இடத்திற்கு மாற்றுவது சாத்தியமா?

### 4. 'இண்டர் டெபாசிட்டரி டிரான்ஸ்ஃபர்' என்றால் என்ன? ஏதாவது ஐஎஸ்ஐஎன்னை (ISIN) மற்றொரு டெபாசிட்டரியிடம் மாற்றுவது சாத்தியமா?

ஒரு வைப்புத்தொகையாளரின் டீமேட் கணக்கிலிருந்து மற்றொரு டிபாசிட்டரி கணக்கில் வேறுபட்ட வைப்புத்தொகையாளர்களிடம் வைத்திருக்கும் ஒரு டீமேட் கணக்கிற்கு செக்யூரிட்டீஸ் இடமாற்றம் செய்யப்படுவதே 'இன்டர் டெபாசிட்டரி டிரான்ஸ்ஃபர்' (IDT) என்று அழைக்கப்படுகிறது. எந்த ஐஎஸ்ஐஎன்களில் (ISIN) இரண்டு டெபாஸிட்டிரிகளும் செயலில் இருந்தால் மட்டுமே ஐடிடி(IDT) சாத்தியமாகும்.

### 5. பகுதி கணக்கு மாற்றம் என்றால் என்ன ?

நீங்கள் கட்டளையை சரி செய்யும் நேரத்தில் டீமேட் கணக்கில் கிடைக்கும் அளவை விட அதிகமான அளவு பணம் செலுத்தும் கட்டளை கொடுக்கிறீர்கள் என்றால், உங்கள் டீமேட் கணக்கில் பாக்கி இருக்கும் அளவிற்கு கழிக்கப்படும். ஆஃப் மார்க்கெட் பரிமாற்றத்தின் போது, போதுமான அளவு கிடைக்கவில்லை என்றால் முழு அறிவுறுத்தலும் தோல்வியடைகிறது, இதன் பொருள் டெபிட் நடைபெறாது என்பதாகும்.

### 6. சந்தை வகை மற்றும் செட்டில்மெண்ட் எண் என்பதன் பொருள் என்ன?

ஒவ்வொரு பங்கு பரிமாற்ற நிலையத்திலும் பல்வேறு பரிமாற்றங்கள் பல்வேறு வர்த்தக ஜன்னல்களின் கீழ் நடக்கும். இந்த ஜன்னல்கள் ஒரு குறிப்பிட்ட சந்தை வகை மற்றும் ஒரு செட்டில்மெண்ட் எண்ணின் தனித்துவமான கலவையால் அடையாளம்

காணப்படுகின்றன. சரியான சந்தை வகையையும் மற்றும்

தீர்வு எண் (டெபாசிட்டரி முறையில் செட்டில்மெண்ட் விவரங்கள் என்று கூறப்படுகிறது) இரண்டையும் டெலிவரி இன்ஸ்டரக்ஷன் ஸ்லீப்பில் நீங்கள் குறிப்பிடுவது முக்கியம் அதனால் உங்களுக்குக் கிடைக்க வேண்டய பணம் சரியாக உங்களுக்கு கிடைக்கும். இந்த விவரங்கள் தரகர் வெளியிட்ட ஒப்பந்தக் குறிப்பில் காணலாம் .

### 7. T + 2 செட்டில்மெண்ட் சைக்கிள் (T+2 rolling settlement cycle)என்றால் என்ன?

T + 2 செட்டில்மெண்ட் சைக்கிள் முறையின் கீழ், நாள் 1 (டி) இல் பங்கு பரிவர்த்தனை தளத்தின் மீது வர்த்தகம் நடத்தி (வாங்குதல் மற்றும் விற்றல்) இரண்டு நாட்களுக்குப் பிறகு அதாவது நாள் 3 (T + 2) அன்று சம்பந்தப்பட்ட கிளியரிங் கார்பரேஷனால் செட்டில்மெண்ட் செய்யப்படுகிறது, . உதாரணமாக, திங்களன்று மேற்கொள்ளப்படும் வர்த்தகங்கள் புதனன்று தீர்க்கப்படும் (அனைத்து நாட்களும் வேலை நாட்கள் எனக் கருதப்படும் பட்சத்தில்). இதேபோல், செவ்வாயன்று மேற்கொள்ளப்பட்ட அனைத்து வர்த்தகங்களும் வியாழனன்று தீர்வு காணப்படுகின்றன. இதே வழி முறை தொடரும். இந்த வகையான செட்டில்மெண்ட் முறை T + 2 ரோலிங் செட்டில்மெண்ட் என அழைக்கப்படுகிறது.

கிளியரிங் கார்பரேஷன்கள் பங்குகளை வாங்குவது மற்றும் அதற்கான பணங்களை கொடுப்பது மற்றும் ஒவ்வொரு செட்டில்மெண்டுக்கான தொகை ஆகிய அனைத்திற்கும் காலக்கெடுவை விகித்துள்ளது. பங்குதாரர்கள் இவற்றை பின்பற்றுமாறு எதிர்பார்க்கப்படுகிறார்கள். பங்குதாரர்கள் அவற்றை கடைப்பிடிக்க வேண்டும்.அவ்வாறு செய்ய, டிபிக்கள் நேரடியாக விற்பனையாளர்களுக்காக பணம் செலுத்துவதற்கான காலக்கெடுக்களை அவர்களிடம் நேரடியாகக் குறிப்பிடுகின்றன. (வங்கிகள் மூலம் நிதி தீர்வு ஏற்படுகிறது, எனவே, டெபாசிட்டரி முறையில் இது இல்லை).

### 8. T + 2 ரோலிங் செட்டில்மெண்ட் சைக்கிளை பொறுத்தவரையில், நான் என் பங்குதாரர் / அங்கீகரிக்கப்பட்ட நபரால் திங்களன்று பங்குகளை விற்பனை செய்திருந்தால், பங்குகளை டெலிவரி செய்யும் கட்டளையை டிபிக்கு எப்போது அளிக்க வேண்டும்?

திங்கள் வர்த்தகத்தில் நடந்துள்ளதால், பணப் பரிவர்த்தனை புதன்கிழமை நடைபெறும், அதாவது உங்கள் தரகர் கிளியரிங் கார்பரேஷனால் நிர்ணயிக்கப்பட்ட நேரமான புதன்கிழமைக்குள் அவரிடம் பங்குகள் வந்து சேர வேண்டும். உங்களால் வழங்கப்பட்ட டெலிவரி இன்ஸ்ட்ரக்ஷன் ஸ்லிப்பை செயல்படுத்துவதற்கு உங்கள் டிபிக்கு சிறிது நேரம் தேவைப்படும்போது, கட்டணம் செலுத்துவதில் தொடர்புடைய வழிமுறைகளை சமர்ப்பிக்க சில காலக்கெடுவை பரிந்துரைத்திருக்கும்.

(வழக்கமாக பணம் வழங்கும் நாளுக்கு முந்தைய நாள்). கொடுக்கப்பட்ட நேரம் மற்றும் நாள் முன் உங்கள் டெலிவரி இன்ஸ்டர்கஷன் ஸ்லிப் உங்கள் டிபியை அடையும் என்பதை நீங்கள் உறுதி செய்ய வேண்டும். எனவே உங்கள் விற்பனையை உங்கள் தரகர் உறுதிப்படுத்தியவுடன் உடனடியாக உங்கள் விநியோக கட்டளைகளை உங்கள் டிபியிடம் நீங்கள் சேர்ப்பது நல்லது.

### 9 அறிவுறுத்தல்களின் சீட்டுகளை சமர்ப்பிப்பதற்கான காலக்கெடுவைப் பற்றி நான் எவ்வாறு அறிந்து கொள்வது?

உங்கள் டிபி விநியோகிக்கப்பட்ட டெலிவரி இன்ஸ்டரக்ஷன் ஸ்லிப்புகளை சமர்ப்பிப்பதற்கான நீங்கள் பின்பற்ற வேண்டிய காலக்கெடுவை உங்களுக்குத் தெரிவிக்கும். உங்கள் தகவலுக்காக டிபி கொடுத்துள்ள டிஐஎஸ் (DIS) கையேட்டில் பொதுவாக இவை அச்சிடப்படுகின்றன.

### 10 நான் பங்குகள் வாங்கும்போது, தரகரிடமிருந்து நான் எந்த நேரத்திற்குள் பத்திரங்களைப் பெற வேண்டும்?

கிளியரிங் உறுப்பினர் கணக்கில் செக்யூரிட்டிகள் பெறப்பட்ட பிறகு, நீங்கள் தரகருக்கு தேவையான பணம் செலுத்தியுள்ளீர்கள் என்றால் ஒரு வேலை நாளுக்குள் பத்திரங்களை உங்கள் பெயரில் மாற்ற வேண்டும், .

### 11 'வாடிக்கையாளரின் தன்னுடைய சொந்த ஆபத்து அடிப்படையில்' என்ற வாக்கியத்தை இன்ஸ்டரக்ஷன் ஸ்லிப்பில் ஏற்றுக் கொண்டு டிபிஆல் வழங்கப்படுவதன் மூலம் பெறுகின்ற அறிவுறுத்தலின் அர்த்தம் என்ன?

ஒவ்வொரு டிபியும் இன்ஸ்டரக்ஷன் ஸ்லிப்புகளின் விநியோக முறைகளை வழங்குவதற்கான சில காலக்கெடுவை பரிந்துரைக்கிறது. இத்தகைய காலக்கெடு காலத்திற்குப் பிறகு, உங்கள் டிபியிடம் உங்கள் இன்ஸ்டரக்ஷன் ஸ்லிப் போய் சேர்த்தால், உங்கள் டிபி வைப்புத்தொகை அமைப்பில் அதனை செயல்படுத்துவதற்க்கு வரம்புக்குட்பட்ட பொறுப்பை ஏற்றுக்கொள்ள முடியும். இத்தகைய சந்தர்ப்பங்களில், டிபிக்கள் இன்ஸ்ட்ரக்ஷன் ஸ்லிப்பில் (வாடிக்கையாளரின் நகல் மற்றும் அவற்றின் அலுவலக நகலை) 'தாமதமாக பெறப்பட்டது , சிறந்த முயற்சிகளுக்குட்பட்டது 'அல்லது'காலந்தாழ்ந்து வந்தது போன்ற முத்திரைகளை குறிப்பிட வேண்டும்.

வாடிக்கையாளரின் சொந்த ஆபத்தின் பெயரில் 'ஏற்றுக் கொள்ளப்படுகிறது என்ற முத்திரையை குத்துகிறார். சில காரணங்களால், டிபியினால் தாமதமாக வந்த கட்டளையை வெற்றிகரமாக டெபாசிட்டரி முறையிலான வழிமுறைகளை நிறைவேற்ற முடியவில்லை என்றாலும், இதன் விளைவாக வாடிக்கையாளர் அதன் இழப்பீட்டுத் தொகையைப் பெறுவதில் தோல்வி அடைந்து, நிதி இழப்புக்கு (ஏல விலை கட்டணங்கள்) வழிவகுத்தது என்றால், அத்தகைய இழப்பிற்கு டிபி பொறுப்பேற்க இயலாது .

### 12 டெலிவரி இன்ஸ்டரக்ஷன் ஸ்லிப்களை பொறுத்தவரையில் நான் என்ன முன்னெச்சரிக்கைகள் எடுக்க வேண்டும்?

டெலிவரி இன்ஸ்டரக்ஷன் ஸ்லிப்ஸ் உங்கள் வங்கி கணக்கு காசோலை புத்தகம் போலவே இருக்கும். டிஐஎஸ்ஸை (DIS)பொறுத்தவரையில் பின்வரும் குறிப்புகளைப் கவனத்தில் கொள்ள வேண்டும் -

a. உங்கள் டிபி யிடமிருந்து டிஐஎஸ் புத்தகத்தை நீங்கள் பெற்றுக்கொள்வதை உறுதி செய்து கொள்ளுங்கள். தனிப்பட்ட சீட்டுகளை ஏற்றுக்கொள்ளாதீர்கள் (அவசரமாக தேவைப்படும் சூழ்நிலைகள் தவிர மற்ற சந்தர்பங்களில் ஏற்றுக் கொள்ளாதீர்கள்).

b. ஒவ்வொரு டிஐஎஸ்ஸூம் முன்பே அச்சிடப்பட்டு வரிசை எண்கள் தொடர்ச்சியாகவும் இருப்பதை உறுதி செய்யுங்கள்.

c. உங்கள் கிளையண்ட் ஐடி ஒவ்வொரு டிஐஸிலும் முன்கூட்டியே முத்திரை அல்லது முன்பே அச்சிடப்பட்டிருப்பதை உறுதிசெய்யுங்கள்.

d. உங்கள் டிஐஎஸை வேறு எவருடனும் விட்டுவிடாதீர்கள். தேவைப்படும் நேரத்தில் அதை நிரப்பி உங்கள் டிபியிடம் ஒப்படையுங்கள்.

e. உங்கள் டிஐஎஸ் புத்தகத்தை பாதுகாப்பாக வைத்திருங்கள். ஏதேனும் ஸ்லிப் அல்லது கையேட்டை தொலைத்தாலோ அல்லது மறதியாக எங்காவது வைத்துவிட்டாலோ தயவுசெய்து உடனடியாக உங்கள் டிபியிடம் இந்த விஷயத்தை எழுத்துபூர்வமாக தெரிவியுங்கள்.

f. டிஐஎஸ்ஸில் ஒன்றுக்கு மேற்பட்ட கட்டளைகளைக் குறிப்பிடுவதற்கான இடம் (லைன்கள்) இருந்தால், அவை அனைத்தையும் நீங்கள் பயன்படுத்துவது இல்லை என்றால், தயவுசெய்து பயன்படுத்தப்படாத லைன்கள் / இடங்களை அடித்துவிட வேண்டும் என்பதை நினைவில் வைத்து கொள்ளுங்கள்.

g. இன்ஸ்டரக்ஷன் ஸ்லிப், தேவையான அனைத்து விவரங்களுடனும் சரியாக பூர்த்தி செய்யப்பட்டு, உங்கள் டிபியிடம் ஒப்படைக்கப்படுவதற்கு முன்னர் அனைத்து கூட்டுதாரர்களாலும் கையெழுத்திடப்பட்டதை உறுதி செய்து கொள்ளுங்கள்.

## 13 டெலிவரி இன்ஸ்டரக்ஷன் ஸ்லிப்பில் கொடுக்கப்பட்ட 'எக்ஸிகியுஷன் தேதி' (‘execution date’) என்றால் என்ன?

செயலாக்கத் தேதி என்பது, உங்கள் கணக்கிலிருந்து பத்திரங்கள் உண்மையில் டெபிட் செய்யப்படும் தேதி ஆகும். நீங்கள் கொடுத்த கட்டளைகள் டெலிவரி இன்ஸ்டரக்ஷன் ஸ்லிப்பில் குறிப்பிடப்பட்ட நாளில் செயல்படுத்தப்பட்டிருக்கிறது என்று உறுதி செய்ய, டிபியினால் அது டெபாஸிட்டரி சிஸ்டத்தில் எழுதப்பட வேண்டும். உங்கள் கணக்கிலிருந்து பங்கு பத்திரங்கள் டெபிட் செய்யவேண்டும் என்று நீங்கள் நினைக்கும் நாளுக்கு பல நாட்களுக்கு முன்பே நீங்கள் கட்டளைகளை வழங்கலாம்(டிஐஎஸ்ஸில் குறிப்பிடப்பட்ட செயலாற்ற வேண்டிய நாளில்தான் உங்கள் கணக்கிலிருந்து பங்கு பத்திரங்கள் டெபிட் செய்யப்படும்)

## 14 எதிர்காலத்தில் செயல்படுத்தும்படி நான் டெலிவரி கட்டளை வழங்குவதன் மூலம் எனக்கு என்ன பயன் கிடைக்கும்?

எதிர்கால தேதியுடனான கட்டளை வழங்குவதன் மூலம், நேரமின்மை அல்லது கடைசி நிமிட கூட்ட நெரிசல் ஆகியவற்றால், உங்கள் கட்டளை செயல்படுத்த முடியாமல் போகக்கூடிய ஆபத்து தவிர்க்கப்படுகிறது. பங்குகள் முதலியனவற்றை உங்கள் விருப்பப்படி பயனாளியின் கணக்குக்கு நீங்கள் விரும்பும் நாளில் மாற்றப்படும் என்று உறுதி செய்ய இந்த வசதி பயன்படுத்தப்படுகிறது.

## 15 ஆ.ஃப் மார்க்கெட் டிரான்ஸ்.ஃபர் தொடர்பாக 'காரணம் / நோக்கம்' மற்றும் 'கன்சிடரேஷன்' (‘Consideration’) என்பதன் பொருள் என்ன?

செபியின் வழிகாட்டுதல்களின் படி, எந்த காரணத்திற்காக அல்லது நோக்கத்திற்காக இந்த ஆ.ஃப் மார்க்கெட் டிரான்ஸ்.ஃபர் முறை செயல்படுத்தப்படுகிறது மற்றும் அதற்காக வழங்கப்பட்ட ஈட்டுத் தொகை ஆகிய விபரங்களை ஒவ்வொரு டிரான்ஸ்.ஃபரின் போதும் டெலிவரி இன்ஸ்டரக்ஷன் ஸ்லிப்பில் குறிப்பிட வேண்டும். பல்வேறு விருப்பங்கள் இதில் கொடுக்கப்பட்டுள்ளன

'காரணம் / நோக்கம்' என்ற டிஐஎஸ் (DIS) கையேடு. நீங்கள் சரியான ஒன்றை தேர்ந்தெடுத்து டிஐஎஸ்ஸில் குறிப்பிட வேண்டும். பரிமாற்றத்தின் காரணம் / நோக்கம் 'ஆ.ஃப் மார்க்கெட் விற்பனை' என்றால் ஈடாக கொடுக்கப்பட்ட தொகையுடன்

கூடுதலாக, பின்வரும் விவரங்களையும் குறிப்பிட வேண்டும் -

a. பணம் கட்டப்பட்ட தேதி.

b. கட்டணம் செலுத்திய முறை (பணம், காசோலை அல்லது மின்னணு முறையில் செலுத்துதல்).

c. ஒருவேளை பணம் செலுத்தும் முறை, காசோலை அல்லது மின்னணு கட்டணம் செலுத்துதலாக இருந்தால், மின்னணு முறையில் செலுத்துதலில் யார் பெயருக்கு மாற்றப்பட்டதோ அவர் பெயர், வங்கி கணக்கு எண், வங்கி பெயர், பரிமாற்றம் குறிப்பு எண் அல்லது காசோலை மூலம் கட்டுவதாக இருந்தால் காசோலை எண் ஆகியவை தேவைப்படும்.

**பங்கு பத்திரங்களை டிரான்ஸிமிட் செய்வது**

1. டிமேட் கணக்குகள் தொடர்பாக டிரான்ஸ்மிஷன் என்றால் என்ன?

இறந்து போய்விட்டவரின் கணக்குகளில் உள்ள பத்திரங்களை தற்போது உயிரோடு இருக்கும் இறந்தவரின் கூட்டுதாரர் (கள்) / சட்டப்பூர்வ வாரிசுகள் / நியமனதாரர்களுக்கு சட்டபூர்வமாக மாற்றப்படும் செயல்முறையே டிரான்ஸ்மிஷன் என்பதாகும். டிபிக்கு தேவையான ஆவணங்களை சமர்ப்பித்ததன் மூலம், ஒரு டிமேடிடரியலைஸ் முறையிலேயே இறந்து போனவர் வைத்திருந்த அனைத்து பங்குகளின் டிரான்ஸ்மிஷன் செயல்முறை ஒப்பீட்டளவில் வசதியானது. இந்த நோக்கத்திற்காக பல்வேறு நிறுவனங்களை அணுக வேண்டிய தேவையில்லை, பத்திரங்களை காகித வடிவில் வைத்திருக்கும் போது இதைச் செய்தாக வேண்டும்.

கணக்கு வைத்திருப்பவர் இறந்தால் (தனியாக கணக்கு வைத்திருப்பவர் அல்லது கூட்டாக வைத்திருப்பவர்), டிரான்ஸ்மிஷன் எவ்வாறு நடக்கும் என்பதை, வரைபடம் எண் 6 இல் விவரிக்கப்பட்டுள்ளது -

## டிரான்ஸ்மிஷன்

| ஒரு வேளை இப்படி நேர்ந்தால் ↓ | இவர்கள் பெயர்களில் டிரான்ஸ்மிஷன் ↓ | |
|---|---|---|
| | நியமனதாரர் வழங்கப்பட்டுள்ளது | நியமனதாரர் வழங்கப்படவில்லை |
| சிங்கிள் ஹோல்டரின மரணம் | நியமனதாரர் | சட்ட வாரிசு(வாரிசு சான்றிதழின்படி/சான்றளிக்கப்பட்ட உயிலின்படி/ நிறுவனத்தின் கடிதம்) |
| கூட்டு கணக்கு வைத்திருப்பவர்களில் யாராவது ஒருவரின் மரணம் | உயிரோடிருக்கும் மற்ற கூட்டு ஹோல்டர்(கள்) | உயிரோடிருக்கும் மற்ற கூட்டு ஹோல்டர்(கள்) |
| கூட்டு கணக்கு | நியமனதாரர் | சட்ட வாரிசு(வாரிசு |

| | | |
|---|---|---|
| வைத்திருப்பவர்கள் அனைவரின் மரணம் | | சான்றிதழின்படி/சான்றளிக்கப்பட்ட உயிலின்படி/ நிறுவனத்தின் கடிதம்) |

வரைபடம் 6

2 ஒரே நபர் வைத்திருக்கும் கணக்கில் அவர் இறந்து போனால், பத்திரங்கள் டிரான்ஸ்மிஷன் செய்யப்படுவதற்கான செயல்முறை என்ன?

ஒரே நபர் கணக்கு வைத்திருப்பவர் இறந்தால், பத்திரங்களை டிரான்ஸ்மிஷன் செய்வதற்காக, டிரான்ஸ்மிஷனிற்கான படிவத்தை பூர்த்தி செய்து, அதனுடன் ஒரு நோட்டரி பப்ளிக் அல்லது கெஜடெட் அதிகாரியால் அத்தாட்சி கையெழுத்திடப்பட்ட மரண சான்றிதழை இணைக்க வேண்டும். உரிமைகோரியவரின் கணக்கு அதே பங்கேற்பாளருடன் இல்லை என்றால், உரிமைகோறுபவரின் கணக்கின் கிளையண்ட் மாஸ்டர் ரிபோர்டின் நகலும்

(சம்பந்தப்பட்ட டிபியால் சான்றிதழ் வழங்கப்பட்டிருக்க வேண்டும்) தேவைப்படுகிறது. இந்த ஆவணங்கள் சரிபார்க்கப்பட்ட பிறகு, டிபி பத்திரங்களை நியமனதாரரின் டீமேட் கணக்கிற்கு டிரான்ஸ்மிட் செய்வார்.

3.ஒரே நபர் டீமேட் கணக்கில் நியமனதாரர் பெயரே இல்லை என்றால் என்ன நடக்கும் ?

அத்தகைய ஒரு நிலையில், சட்டப்பூர்வ வாரிசு (கள்) கணக்கிற்கு பத்திரங்கள் டிரான்ஸ்மிட் செய்யப்படும், தகுதிவாய்ந்த நீதிமன்றத்தின் உத்தரவின் படி தீர்மானிக்கப்படும். இந்த நோக்கத்திற்கு பின்வரும் ஆவணங்கள் தேவைப்படுகின்றன -

a. சரியாக பூர்த்தி செய்யப்பட்ட டிரான்ஸ்மிஷன் படிவம்.

b. நோட்டரி பப்ளிக் அல்லது ஒரு கெஜடெட் அதிகாரியினால் அத்தாட்சி வழங்கப்பட்ட இறப்புச் சான்றிதழின் நகல்.

c. நோட்டரி பப்ளிக் அல்லது ஒரு கெஜடெட் அதிகாரி மூலம் முறையாக சான்றளிக்கப்பட்ட வாரிசு சான்றிதழின் நகல் அல்லது

d. இறந்தவர் உயில் எதுவும் எழுதாத நிலையில் தகுதி வாய்ந்த நீதிமன்றத்தின் ஒரு உத்தரவின் படி அல்லது

e. சான்றளிக்கப்பட்ட உயிலின் பிரதி அல்லது

f. ஒரு நோட்டரி பப்ளிக் அல்லது கெஜடெட் அதிகாரியால் முறையாக அத்தாட்சி வழங்கப்பட்ட, நிர்வாகக் கடிதம்.

g. உரிமைகோருபவரின் கணக்கு அதே பங்குதாரரிடம் இல்லையென்றால், உரிமையாளர் கணக்கின் கிளையண்ட் மாஸ்டர் அறிக்கையின் நகல் (சம்பந்தப்பட்ட டிபி சான்றிதழுடன்) தேவைப்படுகிறது.

எனினும், பத்திரங்களின் மதிப்பானது ` 5,00,000 / - க்கு (டிரான்ஸ்மிஷன் செய்வதற்காக விண்ணப்பித்த நாளில்) கீழே இருந்தால் ,கீழ்க்கண்ட ஆவணங்களின் அடிப்படையில் டிபி கோரிக்கைகளை செயல்படுத்தலாம்:

a. சரியாக பூர்த்தி செய்யப்பட்ட டிரான்ஸ்மிஷன் படிவம்.

b. நோட்டரி பப்ளிக் அல்லது ஒரு கெஜடெட் அதிகாரியினால் அத்தாட்சி வழங்கப்பட்ட இறப்புச் சான்றிதழின் நகல்.

c. இழப்பீட்டு கடிதம் (பரிந்துரைக்கப்பட்ட வடிவத்தில்).

d. சுய விபரங்களடங்கிய சான்றிதழ் (பரிந்துரைக்கப்பட்ட வடிவமைப்பில்) மற்றும்

e. நோ அப்ஜெக்ஷன் சான்றிதழ் (கள்) பரிந்துரைக்கப்பட்ட வடிவத்தில் அல்லது குடும்ப செட்டில்மெண்ட் பத்திரம்.

f. உரிமைகோருபவரின் கணக்கு அதே பங்குதாரரிடம் இல்லையென்றால், உரிமையாளர் கணக்கின் கிளையண்ட் மாஸ்டர் அறிக்கையின் நகல் (சம்பந்தப்பட்ட டிபி சான்றிதழுடன்) தேவைப்படுகிறது.

4. ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கூட்டு நபர்(களின்) இறப்பு நிகழ்ந்தால் டிரான்ஸ்மிஷன் நடைமுறை என்ன?

அத்தகைய நிலையில், பத்திரங்கள் நியமனதாரர் இருந்தாலும் இல்லாவிட்டாலும் எஞ்சியிருக்கும் பங்கு ஹோல்டர்(களுக்கு) டிரான்ஸ்மிட் செய்யப்படும். உதாரணமாக, திரு. ஏ, திரு. பி, மற்றும் திருமதி சி ஆகியவற்றின் கூட்டுப் பெயர்களில் கணக்கிருந்தால், திரு பியின் இறப்பு ஏற்பட்டால், பத்திரங்கள் எஞ்சியிருக்கும் இரண்டு ஹோல்டர்களுக்கு அதாவது திரு ஏ மற்றும் திருமதி சிக்கு டிரான்ஸ்மிட் செய்யப்படும்.
C. எஞ்சியிருக்கும் ஹோல்டர் (கள்) பின்வரும் ஆவணங்களை டிபியிடம் சமர்ப்பிக்க வேண்டும் :

a. சரியாக பூர்த்தி செய்யப்பட்ட டிரான்ஸ்மிஷன் படிவம்.

b. நோட்டரி பப்ளிக் அல்லது ஒரு கெஜடெட் அதிகாரியினால் அத்தாட்சி வழங்கப்பட்ட இறப்புச் சான்றிதழின் நகல்.

மேற்கூறிய ஆவணங்களை சரிபார்த்து, திருப்தி அடைந்த பிறகு, டிபி பத்திரங்களை உயிருடன் வைத்திருப்பவர் (கள்) கணக்கில் டிரான்ஸ்மிட் செய்வதோடு, இறந்தவரின் கணக்கையும் முடித்து வைப்பார்.

5. 'டிரான்ஸ்மிஷன் கம் டீமேட்' ('Transmission cum Demat')என்றால் அதன் பொருள் என்ன?

பத்திரங்களை இணைந்து வைத்திருப்பவர்களில் ஒருவர் அதை காகித வடிவத்திலும் மற்ற ஹோல்டர்(கள்) தங்கள் பெயர்களில் பத்திரங்களை டீமேட் வடிவத்தில் டிரான்ஸ்மிட் செய்ய விரும்பும்போது 'டிரான்ஸ்மிஷன் கம் டீமேட்' என்பது மிகவும் பயனுள்ள வசதி ஆகும். இந்த வசதியை பயன்படுத்தி, கூட்டு கணக்கு வைத்திருப்பவர்களிலிருந்து இறந்தவர்களின் பெயரை நீக்குவதோடு பத்திரங்களின் டீமெட்டிரியலைஸ் செய்யும் வேலை ஆகிய இரண்டு நோக்கங்களையும் ஒரே படியில் செய்து முடிக்க முடியும். இது வரைபட எண் 7 இல் விளக்கப்பட்டுள்ளது -

## டிரான்ஸ்மிஷன் கம் டீமேட் வசதி

| | | |
|---|---|---|
| பங்கு வர்த்தக சான்றிதழ் | ஒரு வேளை இப்படி நேர்ந்தால் | டீமேட் கணக்கு |
| ஏ மற்றும் பி அல்லது பி மற்றும் ஏ | ஒரு ஹோல்டரின் மரணம் - ஏ | பி |
| ஏ,பி, மற்றும் சி (எந்த வரிசையில் வேண்டுமானாலும) | இரண்டு ஹோல்டர்களின் மரணம் - ஏ மற்றும் பி | சி |

மரண சான்றிதழ்(கள்)மற்றும் டிரான்ஸ்மிஷன் கோரிக்கையுடன் டிஆர்எஃபை(DRF) உங்கள் டிபியிடம் சமர்ப்பியுங்கள்

---

வரைபடம் 7

**நியமனம்**

1. 'நியமனதாரர்' என்பதன் அர்த்தம் என்ன?

நியமனம் என்பது ஒரு எளிய செயல் ஆகும், இதன்மூலம் ஓர் ஆண் / பெண் தனது இறப்புக்கு பின் தன்னுடைய பங்குகள் யாரை சென்றடைய வேண்டும் என்ற தன்னுடைய விருப்பத்தை குறிப்பிடுவதே நியமனதாரரை நியமிக்கும் செயலாகும். டீமேட் கணக்கைப் பொறுத்தவரை, நியமனதாரரை நியமிப்பது என்ற செயல்முறை, எந்த நேரத்திலும் டீமேட் கணக்கு திறக்கப்படும் போதோ அல்லது பின்னர் எப்போது வேண்டுமானாலும் செய்யலாம் .

2. நியமனம் யாரால் செய்ய முடியும் ?

டீமேட் கணக்கை தனித்தனியாக அல்லது கூட்டாக வைத்திருக்கும் தனிநபர்கள் மட்டுமே நியமனம் செய்ய முடியும். சமுதாயம், அறக்கட்டளை, நிறுவனம், கார்பரேட் நிறுவனம், பங்குதாரர் நறுவனம், ஒன்றுபட்ட இந்து குடும்பத்தின் கர்தா பவர் ஆஃப் அட்டார்னி வைத்திருப்பவர் போன்ற தனிநபர் அல்லாதவர்கள் நியமனதாரரை நியமிக்க முடியாது.

3. கூட்டு வைத்திருப்பவர்கள் நியமனதாரரை நியமிக்க முடியுமா ?

முடியும். கூட்டு கணக்கு வைத்திருப்பவர்களுக்கு நியமனதாரரை நியமிக்கும் அனுமதி வழங்கப்படுகிறது. அதேநேரம், கூட்டு கணக்குதாரரின்(களின்) விஷயத்தில், கணக்கு வைத்திருப்பவர்களில் யாராவது ஒருவர் இறந்தால், பங்கு பத்திரங்கள் உயிரோடு இருக்கும் மற்ற ஹோல்டர்(கள்) பெயருக்கு டிரான்ஸ்மிட் செய்யப்பட்டுவிடும். கூட்டு கணக்குவைத்திருப்பவர்கள் அனைவருமே இறந்து போனால் மட்டுமே, பங்கு பத்திரங்கள் நியமனதாரரின் பெயருக்கு டிரான்ஸ்மிட் செய்யப்படும் (நியமனதாரரை நியமித்திருந்தால், இல்லையென்றால் சட்ட வாரிசுகளுக்கு டிரான்ஸ்மிட் செய்யப்படும்)

4. என்ஆர்ஐ நியமனதாரரை நியமிக்கலாமா?

முடியும், என்ஆர்ஐ நேரடியாக நியமிக்கலாம். இருப்பினும், என்ஆர்ஐ சார்பில் பவர் ஆ்ஃப் அட்டார்னி அதிகாரத்தை வைத்திருப்பவரால் நியமிக்க முடியாது.

5. ஒரு மைனர் நியமனதாரரை நியமிக்கலாமா?

முடியாது. மைனர் நேரடியாகவோ அல்லது அவரது பாதுகாவலராலோ நியமனதாரரை நியமிக்க முடியாது.

6. யார் நியமனதாரராக இருக்க முடியும்?

ஒரு தனி நபரை மட்டுமே நியமனதாரராக இருக்க முடியும். சமுதாயம், அறக்கட்டளை, நிறுவனம், பெருநிறுவனம், கூட்டாண்மை நிறுவனம், பிளவுபடாத இந்து குடும்பங்களின்

கர்தா அல்லது ஒரு பவர் அட்டார்னி வைத்திருப்பவர் டீமேட் கணக்கில் ஒரு நியமனதாரராக இருக்க முடியாது.

7. ஒன்றுக்கு மேற்பட்ட நியமனதாரர் இருக்கலாமா?

இருக்கலாம், தற்போது ஒரு டீமேட் கணக்கிற்கு மூன்று நியமனதாரர்களை நியமிக்கலாம். இரண்டு அல்லது மூன்று நியமனதாரர்களைக் குறிப்பிட்டால், கணக்கு வைத்திருப்பவரின் மரணத்திற்குப் பிறகு பல்வேறு பத்திரங்கள் யார்யாருக்கு விரும்பப்படுகிற எந்தெந்த விகிதத்தில் (%) வழங்க வேண்டும் என்பதையும் குறிப்பிட வேண்டும்.

8. ஒரு மைனர் நியமனதாரராக இருக்க முடியுமா ?

ஆமாம், ஒரு மைனர் நியமனதாரராக இருக்க முடியும். ஒரு டீமேட் கணக்கில் ஒரு மைனர் நியமனதாரராக நியமிக்கப்பட்டால், அவருடைய பாதுகாவலரின் விவரங்களும் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

9. ஒரு டீமேட் கணக்கில் வைத்திருக்கும் ஒவ்வொரு செக்யூரிட்டிக்கும் தனித்தனியாக நியமனதாரரை நியமிக்கலாமா?

முடியாது. பரிந்துரையை கணக்கு வாரியாக செய்யலாமே தவிர தனித்தனி செக்யூரிட்டி வாரியாக செய்ய முடியாது. இதன் அர்த்தம் என்னவென்றால், கணக்கு வைத்திருப்பவர் இறந்துவிட்டால், டீமேட் கணக்கில் உள்ள அனைத்து பத்திரங்களும், முன்பே பதிவு செய்யப்பட்ட விகிதத்தில் நியமனதாரர் (களு) க்கு அனுப்பப்பட்டுவிடும். வேறுபட்ட பத்திரங்களுக்கு வெவ்வேறு நியமனதாரர்களை நீங்கள் விரும்பினால், நீங்கள் பல்வேறு டீமேட் கணக்குகளில் பத்திரங்களை வைத்துக் கொண்டு உங்கள் விருப்பம் போல் நியமனதாரர் (கள்) குறிப்பிட வேண்டும்.

10. ஒரு என்ஆர்ஐ நியமனதாரராக இருக்கலாமா?

ஆமாம், அந்நியச் செலாவணி ஒழுங்குமுறை அமலாக்கத்திற்கு உட்படுத்தப்பட்டால், டீமேட கணக்கில் என்ஆர்ஐ (NRI) நியமனதாரராக நியமிக்கப்படலாம்.

11. நியமனதாரரை நியமனம் செய்வதற்கான நடைமுறை என்ன?

கணக்கு துவக்க நேரத்தில் கணக்குத் திறப்பு படிவத்தில் நியமனதாரர் (கள்) தொடர்பான தகவலை டீமேட் கணக்கு வைத்திருப்பவர்கள் குறிப்பிட வேண்டும். மூன்று வெவ்வேறு தனிநபர்கள் வரை ஒரு டீமேட் கணக்கின் நியமனதாரராக நியமிக்கப்படலாம் .

கணக்கு துவங்குவதற்கு அல்லது செய்யப்படும்போது நியமனதாரரை நியமிக்கவில்லை என்றாலோ அல்லது அவ்வாறு செய்து பின்னாளில் அதை மாற்ற வேண்டும் என்று நினைத்தாலோ ஒரு 'நியமனதாரர்' படிவத்தை பூர்த்தி செய்து டிபியிடம் வழங்கப்பட வேண்டும்.

### 12. நியமனதாரரை மாற்ற முடியுமா ?

மாற்றலாம், கணக்கு வைத்திருப்பவர் எப்போது வேண்டுமானாலும் நியமனம் படிவத்தை பூர்த்தி செய்து டிபி க்கு சமர்ப்பித்து நியமனதாரை மாற்றலாம்.

### 13. டீமேட் கணக்கில் நியமனதாரர் இருப்பது அவசியம்தானா ?

டீமேட் கணக்கிற்கு நியமனம் கட்டாயமில்லை. இருப்பினும், டீமேட் கணக்கில் நியமனதாரர் குறிப்பிடப்படுவது மிகவும் பரிந்துரைக்கப்படுகிறது. ஒரே ஒருவர் கணக்கு வைத்திருப்பவரின் இறப்பு துரதிருஷ்டவசமாக நடந்து விட்டால், அது பரிமாற்ற செயல்முறையை மிகவும் சுலபமாகவும் வேகமாகவும் செய்கிறது. கணக்கு திறக்கும் நேரத்தில் எந்த நியமனதாரரையும் குறிப்பிட விரும்பவில்லை என்றால் , "நான் / நாங்கள் ஒரு நியமனதாரரை நியமிக்க விரும்பவில்லை" என்று குறிப்பிடுவது அவசியமாகிறது.

## பங்கு பத்திரங்களை அடமானம் மற்றும் பிணையம் வைப்பது

### 1. பங்குகளை அடமானம் வைப்பதன் அர்த்தம் என்ன?'

அடமானம் என்பது அடிப்படையில் பங்குகளை வைத்திருக்கும் நபர் (அடமானம் வைப்பவர் pledgor)உறுதிமொழி அடிப்படையில் மற்றொரு நபருக்கு (அடமானம் எடுத்துக்கொள்பவர் pledgee) தன்னுடைய பங்குகளை ஏதாவது பணத்திற்கு ஈடாக வைக்கும் செயலாகும். பொதுவாக, பங்குகளுக்கு நிகராக கடன் வாங்கும்போது சம்பந்தப்பட்ட பங்குதாரர் தன்னுடைய பங்குகளை அடமானம் வைப்பார்.

### 2. என் வங்கிதாரர்கள் என் பெயரில் இருக்கும் செக்யூரிட்டிகளுக்கு இணையாக வழங்கும் கடன் வசதியை நான் பயன்படுத்திக் கொள்ள என் டீமேட் கணக்கில் வைத்திருக்கும் பங்குகளை நான் அடமானம் செய்ய விரும்பினால், நான் என்ன செய்ய வேண்டும்?

செயல்முறை பின்வருமாறு உள்ளது :

a. கடன் தொகை, கடன் காலம், வட்டி விகிதம் மற்றும் கடனுக்கு ஈடாக வழங்கப்படும் பாதுகாப்புப் பத்திரங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் வங்கியுடன் ஒரு ஒப்பந்தத்திற்கு நீங்கள் வர வேண்டும். அத்தகைய ஒப்பந்தத்தின் வர்த்தக அம்சங்கள் பரஸ்பர பேச்சுவார்த்தைக்கு உட்பட்டுள்ளதால் அது டெபாஸிட்டரியின் சட்டத்திற்கு உட்படாது.

b. நீங்கள் இருவரும் (pledgor) மற்றும் வங்கி / கடனளிப்போர் (உறுதிமொழி) ஆகியவற்றுடன் அதே கணக்கு வைத்திருக்க வேண்டும் (அதே அல்லது

வெவ்வேறு டிபிக்களின்).

c. அடமானம் வைப்பவரான நீங்கள் அடமானத்தை முன்னெடுத்துச் செல்ல 'அடமானம் முன்வைத்தல் கட்டளை ஸ்லிப்' பை('Pledge Initiation Instruction Slip')முறையாக பூர்த்தி செய்து உங்கள் டிபியிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

d. உங்கள் டிபி உங்கள் அறிவுறுத்தலை செயல்படுத்துகையில், வங்கி / கடன் வழங்குபவர் (அடமானம் வைத்துக் கொள்பவர்) விவரங்களை அவர்களுடைய டிபியில் காணலாம் (அல்லது தேடலாம்). அதன் பிறகு டிபிக்கு 'உறுதிமொழி உறுதிப்படுத்தல் வழிமுறை ஸ்லிப்'பை ('Pledge Confirmation Instruction Slip')நிரப்பி டிபியிடம் வழங்க வேண்டும். (மாற்றாக, அடமானம் வைத்துக் கொண்டு பணம் தருபவர் தன்னுடைய டீமேட் கணக்கில் தானியங்கி அடமானம் உறுதிமொழி வழங்கும் வசதியை அளிக்க முடியும்). அந்த கட்டளை நிறைவேறியவுடன்

டெபாஸிட்டரி சிஸ்டத்தில் உறுதிமொழி உருவாக்கப்படும்.

### 3. செக்யூரிட்டிகலை அடமானம் வைத்து செய்யப்படும் உறுதிமொழியின் உருவாக்கத்தின் விளைவு என்ன?

உறுதிமொழி அறிவுறுத்தல்கள் டெபாசிட்டரி முறையிலேயே உறுதி செய்யப்பட்டவுடன், அடமானம் வைத்தவரின் அடிப்படை பாதுகாப்புப் பத்திரங்கள் அவருடைய டீமேட் கணக்கில் தடுக்கப்படும். இந்த தடுப்பு இருக்கும் வரை, அந்த பத்திரங்களை விற்பதில் அடமானம் வைப்பவர் தடுக்கப்படுகிறார்.

### 4. கடனைத் திருப்பிச் செலுத்துபபின், நான் அடமானம் வைத்த பத்திரங்களை என்னுடைய டீமேட் கணக்கில் கடனில்லாத இருப்பாக பெறுவது எப்படி ?

கடனை திருப்பிச் செலுத்துவதன் மூலம், அடமானம் வைத்தவர் முறையாக 'அடமானம் முடித்த அறிவுறை ஸ்லிப்' ('Pledge Closure Initiation Slip')என்ற படிவத்தை பூர்த்தி செய்து அதை டிபி க்கு அனுப்ப வேண்டும். இந்த செயல் நிறைவேற்றப்பட்டவுடன், இந்தத் தகவல் டிபிக்கு அனுப்பப்படும் அதன் பின் கடன் வழங்கியவர் டிபி க்கு 'உறுதிமொழி மூடல் உறுதிப்படுத்தல் வழிமுறை' ('Pledge Closure Confirmation Instruction') என்ற படிவத்தை டிபியிடம் சமர்ப்பிக்கலாம். (மாறாக, உறுதிமொழி அளிப்பதற்கான கோரிக்கைக்காக கடன் வழங்கியவருக்காக காத்திருக்காமல் உறுதிமொழியை நிறைவு செய்யும்படி டிபிக்கு கட்டளை வழங்கலாம்).

உறுதிமொழி மூடப்பட்டவுடன், அடிப்படைப் பத்திரங்கள் மீது உருவாக்கப்பட்ட தடுப்பு அகற்றப்பட்டு, முன்னாள் அடமானம் வைத்தவருக்கு அவருடைய பங்குகள் மீண்டும் அவர் விருப்பம்போல் விற்பதற்கு கிடைக்கும்.

### 5. நான் அடமானத்தில் வழங்கிய பத்திரங்களை மாற்றலாமா?

மாற்றலாம், அடமானம் வைத்துக் கொண்டவர் (கடன் வழங்குபவர்) ஒப்புக்கொள்கிறார்கள் என்றால், நீங்கள் ஒரு அடமானத்தில் குறிப்பிட்டுள்ள பத்திரங்களை மாற்றலாம். இந்த நோக்கத்திற்காக, புதிய உறுதிமொழியை உருவாக்குவதற்கான ஒரு புதிய கோரிக்கை அடமானம் வைப்பவரால் வழங்கப்பட்டு, ஏற்கனவே இருக்கும் உறுதிமொழி மூடப்பட வேண்டும்.

### 6. அடமானம் வைக்கப்பட்ட பத்திரங்களிலிருந்து வரும் ஈவுத்தொகையை யார்

பெறுவார்கள் ?

பங்குபத்திரங்கள் அடமானம் வைக்கப்பட்ட காலப்பகுதியில் அடிப்படை பங்குதாரர்களே தொடர்ந்து அதலிருந்து வரும் அனுகூலங்களை அனுபவிக்கும் உரிமையாளராக இருக்கிறார். எனவே, இந்த காலக்கட்டத்தில் கார்பரேட் நிறுவனத்தால் அறிவிக்கப்பட்ட அனைத்து நன்மைகளும் அடமானம் வைத்தவருக்கே கிடைக்கும். பதிவு தேதியில் கஅடமானம் வைத்துக் கொண்டவரின் கணக்கில் பங்கு பத்திரங்கள் இருந்தால் அடமானம் வாங்கி கடன் கொடுத்தவர் லாபங்களை பெறுவார்.

7. அடமானம் செய்யப்பட்ட பங்குகளுக்கான போனஸ் பங்குகள் விநியோகம் எப்படி நடக்கும்?

பதிவு செய்யப்பட்ட தேதிகளில் பங்குகள் அடமானம் செய்யப்பட்டுள்ள நிலையில் இருந்தால், போனஸ் பங்குகள் அடமானம் வைத்தவரின் கணக்குக்கு வரவு வைக்கப்படும் அதே சமயம் அடமானம் கடன் கொடுத்தவரின் பெயரில் குறிப்பிடப்பட்டிருக்கும். அடமானம் முடிவடைந்தவுடன், அனைத்து பங்குகளும் (போனஸ் உட்பட) அடமானம் வைத்தவரின் கணக்கிற்கு சுதந்திர பங்குகளாக வரவு வைக்கப்படும். ஒரு வேளை மீண்டும் மறுஅடமானம் வைக்கப்பட்டால் அனைத்து பங்குகளும் (போனஸ் உட்பட) அடமானம் பெற்றவரின் கணக்குக்கு நகர்த்தப்படும்.

8. டிஜிட்டல் எல்ஏஎஸ் (LAS) வசதி என்றால் என்ன ?

டிஜிட்டல் எல்ஏஎஸ் (பங்குகளுக்கு எதிரான கடன்) என்பது பங்குகளை ஆன்லைனில் அடமானம் வைத்து கடன் பெறுவதை என்எஸ்டிஎல்( NSDL) ஆல் செயல்படுத்தப்பட்ட ஒரு வசதியாகும். இந்த வசதியைப் பயன்படுத்தி, ஒரு டீமேட் கணக்கு வைத்திருப்பவர், தன்னுடைய தகுதியுள்ள பத்திரங்களை கடனளிக்கும் வங்கியில் அடமானம் வைத்து நிதி (கடன்) பெறலாம். இதைப் பற்றிய கூடுதல் தகவல்களுக்கு, பங்கேற்பு வங்கியை நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.

9. அடமானம் மற்றும் பிணையம் (Hypothecation) இரண்டுக்குமுள்ள வித்தியாசம் என்ன ?

டெபாஸிட்டரி சிஸ்டத்தில் அடமானம் மற்றும் பிணையம் இரண்டுக்கும் இடையே வித்தியாசம் எதுவும் கிடையாது, ஆனால், அடமானத்தை கடன் கொடுத்தவர்(அடமானம் வைத்துக் கொண்டிருப்பவர்) அந்த அடமானத்தை நீட்டிக்கலாம். அதே நேரம், பிணையம் என்று வரும் போது, கடனை மேலும் நீட்டிக்க, கடன் வாங்கியவரின் (ஹைபாதிகேட்டர் hypothecator) ஒப்புதல் தேவைப்படுகிறது.

**பங்குபத்திரங்களை கடனாகத் தருவது மற்றும் கடனாகப் பெறுவது**

1. பங்கு பத்திரங்களை கடனாக தருதல் மற்றும் கடனாக வாங்குதல் என்பதன் பொருள் என்ன? இது எவ்வாறு செயலாற்றுகிறது?

செக்யூரிட்டீகள் கடன் வழங்குதல் மற்றும் கடன் வாங்குதல் திட்டமான (எஸ்எல்பீஎஸ்) [Securities Lending and Borrowing Scheme (SLBS)]என்பது, குறுகிய கால விற்பனையாளர்களுக்கு பங்கு பரிமாற்ற அரங்கில் அவற்றின் விநியோக கடமைகளை நிறைவேற்றவோ அல்லது டெலிவரி கடமைகளை நிறைவேற்றவோ அல்லது கடன்களுக்கு இணையாக ஈழப்பீடாக வழங்குவதற்காகவோ ஏற்பட்ட ஒரு வழிமுறையாகும். இந்த திட்டம் 'அங்கீகரிக்கப்பட்ட தரகர்கள்' (‘Approved Intermediaries’)என்று பதிவு செய்யப்படும் கிளியரிங்

நிறுவனங்களால் நிர்வகிக்கிக்கப்படுகிறது.

அங்கீகரிக்கப்பட்ட தரகர்களுடன் 'பங்கேற்பாளராக' தங்களை பதிவுசெய்துள்ள பங்குதரகர்கள், தங்கள் சொந்த கணக்குக்காக அல்லது தங்கள் வாடிக்கையாளர்களின் சார்பாக எஸ்எல்பிஎஸ்ஸில்(SLBS) பங்கேற்கலாம். சில்லறை முதலீட்டாளர்கள் இந்தத் திட்டத்தில் கடன் வழங்குபவராக அல்லது கடன் பெறுபவராக தங்கள் பங்கு வர்த்தகர் மூலம் பங்கு பெறலாம். T + 1 செட்டில்மெண்ட் அடிப்படையில் டெபாஸிட்டரி சிஸ்டத்தில் கடன் வழங்குவது மற்றும் கடன் வாங்குவது இரண்டும் செயல்படுத்தப்படுகிறது. எஸ்எல்பிஎஸ் டிமெட்டரியலைஸ்டு வடிவத்தில் மட்டுமே அனுமதிக்கப்படுகிறது.

2. பங்கு பத்திரங்களை கடனாக வழங்குவது மற்றும் கடனாக வாங்குவதினால் என்ன அனுகூலங்கள்?

சந்தை அடிப்படையிலான அமைப்பான இந்த எஸ்எல்பிஎஸ், பங்கு பத்திரங்களின் தற்காலிக தேவையை பூர்த்தி செய்ய உதவுகிறது. குறுகிய விற்பனையாளர்கள் தங்களுடைய டெலிவரி கடமையை நிறைவேற்ற அல்லது ஈடுகட்ட வேண்டிய தேவைகளுக்காக சந்தையிலிருந்து பங்கு பத்திரங்களை கடனாக வாங்குவார்கள். அதே நேரம் கடன் வழங்குபவர்கள் எந்த பயனும் இல்லாமல் தங்கள் கணக்கில் இருக்கும் பங்கு பத்திரங்களை கடனாக அளிப்பதன் மூலம் கடனாக அளித்ததற்கான கட்டணத்தை ஈட்டலாம்.

3. நான் என் கணக்கில் இருக்கும் பத்திரங்களை கடனாக அளிக்கலாமா ?

முடியும். 'அங்கீகரிக்கப்பட்ட இடைத்தரக'ரிடம்(கிளையரிங் கார்பரேஷன்) தன்னை ‘பங்குதாரராக’ பதிவு செய்துள்ள உங்களுடைய பங்கு வர்த்தகர் மூலம் உங்கள் பங்கு பத்திரங்களை கடனாக நீங்கள் அளிக்கலாம். உங்கள் பங்குதரகருடன் ஒரு நிலையான ஒப்பந்தத்திற்குள் நீங்கள் செல்ல வேண்டும்.

4. பங்கு பத்திரங்கள் கடனாகவோ வழங்குவதற்கோ அல்லது பெறுவதற்கோ ஆன காலக்கெடு எது?

கடன் வழங்க மற்றும் பெறுவதற்கான காலம் 1 முதல் 12 மாதங்கள் வரை இருக்கலாம். இருப்பினும், கடனளிப்பவர்கள் மற்றும் கடனாளிகளுக்கு தங்கள் பத்திரங்களை குறிப்பிட்ட காலத்திற்கு முன்பாகவே திரும்ப பெறுவதற்கான உரிமை இருக்கிறது.

5. எந்தவொரு பங்கு பத்திரத்தையும் கடன் கொடுப்பதற்கும் கடனாக வாங்குதலுக்கும் பயன்படுத்தலாமா?

முடியாது. தற்சமயம் எந்த பங்கு பத்திரங்கள் பங்குவர்த்தக நிலையத்தின் ஃப்யூச்சர்ஸ் (Futures) மற்றும் ஆப்ஷன்ஸ் (Options) பிரிவில் இருக்கிறதோ அவைகளை மட்டுமே கடனாக அளிக்கவும் கடனாக பெறவும் முடியும். எஸ்எல்பிஎஸ்ஸின்(SLBS) இன் கீழ் தகுதியுள்ள பத்திரங்களின் பட்டியலை அவ்வப்போது ஒப்புதல் பெற்ற இடைத்தரகர்களால் அறிவிக்கப்படுகிறது.

6. என் டிமேட் கணக்கிலுள்ள பங்கு பத்திரங்களைக் கடனாக எப்படி கொடுப்பது?

பங்கு பத்திரங்களைக் கடனாக கொடுப்பதற்காக உங்கள் உத்தரவினை உங்கள் பங்கு வர்த்தகரிடம் நீங்கள் முன்வைக்கலாம். உங்கள் தரகர் பங்கு பரிமாற்ற தளத்தில் உங்களுடைய ஆர்டரை உங்கள் தரகர் உள்ளிடுவார். ஆணை வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்ட பிறகு, நீங்கள் பணம் பெறுவதற்காக உங்கள் தரகருக்கு டெலிவரி இன்ஸ்டரக்ஷன ஸ்லிப்பை வழங்க வேண்டும்.

7. நான் கடனளித்த பத்திரங்களை எவ்வாறு திரும்பப் பெறுவேன்?

பத்திரங்கள் கடனாக வாங்கியவர் ஒப்புக் கொள்ளப்பட்ட காலம் முடிவடைந்த பின் அல்லது அதற்கு முன்னரோ பத்திரங்களை திரும்பப் வழங்லாம் (அந்த பங்கு பத்திர பரிவர்த்தனையில் குறிப்பிட்ட காலத்திற்கு முன்னால் கணக்கை மூடுவதற்கான அனுமதி அங்கீகரிக்கப்பட்ட இடை தரகரால் வழங்கப்பட்டிருந்தால்). திரும்பப் பெறும்போது, உங்கள் தரகர் மூலமோ அல்லது நேரடியாக கிளியரிங் கார்ப்பரேஷன் மூலம் பத்திரங்கள் உங்கள் டிமேட் கணக்கில் வரவு வைக்கப்படும்.

8. கடனாக வழங்கப்பட்ட காலப்பகுதியில் கிடைக்கக்கூடிய என்னுடைய பாதுகாப்புப் பத்திரங்களின் மீது கிடைக்கும் கார்பரேட் அனுகூ லங்ளை நான் எவ்வாறு பெற முடியும்?

கார்ப்பொரேட் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படும் பங்கு பத்திரங்கள், கார்ப்பரேட் நடவடிக்கையின் வகையைப் பொறுத்து பரிவர்த்தனை அல்லது சரிசெய்தல் முன்கூட்டியே செய்யப்படும். ஈவுத்தொகை மற்றும் பங்குச் சிதறல் தவிர மற்ற கார்ப்பரேட் செயல்களின் விஷயத்தில் அனைத்து பரிவர்த்தனைகளும் முன்கூட்டியே முடிக்கப்படும். ஈவுத்தொகை விஷயத்தில், ஈவுத்தொகை, கடன் வாங்கியவரிடமிருந்து கிளியரிங் கார்பரேஷனால் பெறப்பட்டு கடன் வழங்கியவரிடம் அளிக்கப்படும. பங்கு பிளவு வழக்கில், கடனாளியின் நிலை விகிதத்தில் சரிசெய்யப்பட்டு, கடனளிப்பவர் திருத்தம் செய்யப்பட்ட தேதியில் மறுபரிசீலனை செய்யும்போது உரிய பங்குகளை பெறுவார்.

9. என் தற்காலிக தேவையை பூர்த்தி செய்ய நான் கடன் பத்திரங்கள் எவ்வாறு வாங்கலாம்?

உங்களுடைய தரகரிடம் உங்கள் ஆர்டரை சொல்லும் போது , பெயர் மற்றும் தேவைப்படும் பங்கு பத்திரங்களின் எண்ணிக்கை , கடனுக்கான காலம் குறிப்பிடுவது அவசியம்). உங்கள் பங்குதரகர் பங்குவர்த்தக அரங்கில் உங்களுடைய கட்டளையை செயல்படுத்துவார். பணத்தை பெற்றபின், உங்கள் தரகர் உங்கள் டிமேட் கணக்கில் செக்யூரிட்டிகளை பற்று வைக்க ஏற்பாடு செய்வார். குறிப்பிட்ட காலத்திற்கு பிறகு நீங்கள் கடன் வாங்கிய பங்கு பத்திரங்களை திரும்ப தர வேண்டும்(அங்கீகரிக்கப்பட இடைத்தரகரால் அனுமதிக்கப்பட்டாலோ அல்லது விருப்பப்பட்டாலோ அதற்கும் முன்னாலேயே திரும்பத் தரலாம்)

**டிமேட் கணக்கிற்கு பவர் ஆ:ப் அட்டர்னியை பயன்படுத்துதல்**

1. வேறு யாராவது என் டிமேட் கணக்கை என் சார்பாக இயக்க முடியுமா?

முடியும். உங்கள் டிமேட் கணக்கை செயல்படுத்துவதற்கு நீங்கள் யாரையும் அங்கீகரித்தால், அவர் பெயரில் ஒரு பவர் ஆ்ப் அட்டர்னி (POA) நிறைவேற்றி அதை உங்கள் டிபியிடம் வழங்குவதன் மூலம் அந்த நபர் உங்கள் சார்பாக உங்கள் கணக்கு செயல்படுத்த முடியும். டிமேட் கணக்கை, கணக்கு வைத்திருப்பவர் (கள்) மற்றும் பீஓஏ (POA) வைத்திருப்பவர் ஆகியோர் மூலமாகவும் இயக்க முடியும் வைத்திருப்பவர்.

2. பிஓஏவை எனது தரகர் / டிபிக்கு வழங்குவது அவசியமா?

இல்லை, பிஓஏவை வழங்குவது அவசியமில்லை. எந்த பங்கு தரகரோ அல்லது டிபியோ தங்கள் சேவைகளை வழங்க இது பிஓஏ வேண்டும் என்று கட்டாயப்படுத்த முடியாது. சேவைகள் வழங்குவதற்கு எந்த ஒரு தரகர் அல்லது டிபியும் இது வேண்டும் என்று உறுதியாக கேட்க முடியாது. எனினும், உங்கள் தரகர் வழங்கிய ஆன்லைன் வர்த்தக வசதிகளைத் நீங்கள் தெரிவு செய்ய விரும்பினால், செபியின் வழிகாட்டுதலின் படி, அதன் ஆதரவில் பிஓஏ (POA) வை வழங்கும்படி தரகர் உங்களிடம் கேட்கலாம். 3

3. நான் ஒருவருக்கு ஒரு பிஓஏ( POA) கொடுக்க விரும்பினால் நான் என்ன முன்னெச்சரிக்கைகள் எடுக்க வேண்டும்?

முதலில், நீங்கள் பிஓஏவே (POA) வழங்க வேண்டிய அவசியத்தை நீங்கள் உறுதி செய்ய வேண்டும். உங்கள் டிபிக்கு டிஐஎஸ்ஸை சமர்ப்பிக்க கடினமாக இருப்பின், ஸ்பீட்-இ வசதிகளைப் பயன்படுத்துவது பற்றி நீங்கள் பரிசீலிக்கலாம்.

நீங்கள் யாருக்காவது பிஓஏவை (POA) வழங்க முடிவு செய்தால், தயவுசெய்து தேவைப்படும் நோக்கங்களுக்காக மட்டுமே தேவைப்படும் அதிகாரங்களை வழங்குவதை உறுதிசெய்து கொள்ளுங்கள். ஒரு பொது பவர் ஆ்ப் அட்டர்னி வழங்குவதை தவிர்ப்பது நல்லது. மேலும், செபியின் வழிகாட்டல்களின் படி, பங்குதாரர்களுக்கு வழங்கப்படும் பிஓஏவாடிக்கையாளரின் கட்டளைகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட வர்த்தகத்தில் எழும் செட்டில்மெண்ட் கடமைகளுக்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்.

4. என் பங்குதரகரின் பெயரில் பிஓஏவை ( POA) வழங்கினேன். இப்போது அவர் அதை இனிமேல் பயன்படுத்துவதை நான் விரும்பவில்லை. நான் என்ன செய்ய வேண்டும் ?

உங்களுடைய நோக்கம் பற்றி உங்கள் தரகரிடம் தெரிவிப்பதோடு கூடுதலாக, நீங்கள் உங்கள் தரகருக்கு வழங்கிய பிஓஏ வை ரத்து செய்து விட்டதாக உங்கள் டிபிக்கு ஒரு விண்ணப்பம் தர வேண்டும். கூட்டு கணக்கு வைத்திருப்பவர் (கள்) விஷயத்தில், அனைத்து கணக்கு வைத்திருப்பவர்களும் அத்தகைய விண்ணப்பத்தில் கையெழுத்திட வேண்டும்.

**என்எஸ்டிஎல்லிருந்து இ-சேவைகள்**

தொழில்நுட்ப முனைகளில் நடக்கும் முன்னேற்றம் காரணமாக, என்எஸ்டிஎல் (NSDL) தொடர்ந்து பல புதுமைகளை அறிமுகம் செய்வதோடு டெபாஸிட்டரி சேவைகளை மேன்மேலும் ஆன்லைனில் கிடைக்கும் வசதிகளை செய்து வருகிறது. இவற்றில் சில கீழே விவரிக்கப்பட்டுள்ளன -

**ஸ்பீட்-இ**

ஸ்பீட்-இ (SPEED-e)(ஸ்பீடீ என்று உச்சரிக்கப்படுகிறது) என்பது என்எஸ்டிஎல் (NSDL) வழங்கும் இணைய அடிப்படையிலான வசதி ஆகும். இது டிமேட் கணக்கு வைத்திருப்பவர் விநியோகிப்பு, அடமானம் வைத்தல் மற்றும் பரஸ்பர நிதியைப் பெறும் வழிமுறைகளை மின்னணுப் வடிவத்தில் வழங்குவதன் மூலம், செயல்முறை மிகவும் வேகமாகவும் பாதுகாப்பாகவும் திறமையாகவும் உள்ளது. இந்த வசதி கணினிகளில் (டெஸ்க்டாப் / மடிக்கணினி) கிடைக்கிறது, மேலும் கடவுச்சொல் பயனர்கள் மொபைல் தொலைபேசியிலும் அதே அணுகலைப் பெறலாம். அவரது டிபி இந்த சேவையை வழங்கினால், டிமேட் கணக்கு வைத்திருப்பவர் இந்த சேவையைப் பெற முடியும். இந்த சேவையை வழங்கும் டிபிக்களின் பட்டியல் https://nsdl.co.in/speede-dps.php.
இல்கிடைக்கிறது .

1. நான் எப்படி ஸ்பீட்-இ வசதியை பயன்படுத்த முடியும் ?

இந்த வசதியை இந்த நோக்கத்திற்காக தங்களை பதிவு செய்யும் டிமேட் கணக்கு வைத்திருப்பவர்கள் பயன்படுத்தலாம். உங்கள் டிபி இந்த வசதியை பெற நீங்கள் பதிவு செய்ய உங்களுக்கு உதவும். வெற்றிகரமான பதிவுக்குப் பிறகு, நீங்கள் ஆன்லைனில் உள்ள கட்டளைகளை சமர்ப்பிக்கவும் அத்தகைய கட்டளைகளின் நிலையை கண்காணிக்கவும் முடியும். உங்களுடைய டிபிக்கு நீங்கள் காகிதத்தில் இன்ஸ்டரக்ஷன் ஸ்லிப்பை பூர்த்தி செய்து வழங்க வேண்டிய அவசியம் இல்லை. மேலும் தகவலுக்கு மற்றும் பதிவு செய்ய, செல்க https://eservices.nsdl.com/..

2. நான் ஒரு ஸ்பீட்-இ பயனர் என்றால் எனது விருப்பத்தின் படி எந்தவொரு கணக்கிலும் பத்திரங்களை மாற்றுவதற்கு முடியுமா ?

ஸ்பீடி-இ மேடையில் சமர்ப்பிக்கக்கூடிய டெலிவரி அறிவுறுத்தல்கள் நீங்கள் தேர்ந்தெடுக்கும் அணுகல் முகையை பொறுத்துள்ளது. கடவுச்சொல் பயனர் மற்றும் மின் டோக்கன் பயனர்கள் - இரண்டு விருப்பங்கள் உள்ளன.

கடவுச்சொல் பயனர் கடவுச்சொல் மூலம் லாக் இன் செய்து, தனது விருப்பப்படி ஆறு முன்-முந்தைய தரகு கணக்குகளுக்கு மட்டும் பத்திரங்களை பரிமாற்ற முடியும். இ-டோக்கன் பயனர் மின் டோக்கன் உதவியுடன் லாக் இன் செய்வதோடு அவரது விருப்பப்படி எந்த டிமேட் கணக்குகளுக்கும் பத்திரங்களை மாற்றலாம்.

3. ஸ்பீட்-இ வசதிகளின் பயனர்களுக்கு இ டோர்ககினால் கூடுதல் அனுகூலகங்கள் இருக்கிறதா?

ஸ்பீட்-இ வசதிகளில் இ-டோக்கன் விருப்பத்தினால் கூடுதல் பயன்கள் பின்வருமாறு:

a. பல அங்கீகார வசதி, அதாவது கூட்டாக கணக்கு வைத்திருப்பவர்களின் அங்கீகராம் மூலம் கட்டளைகள்.

b. உங்கள் டிமேட் கணக்கை (முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ) செயல்படுத்த முடியாமல் ஃப்ரீஜ் (freeze)செய்யலாம். ஸ்பீட்-இ பயனரால் கணக்கு முடக்கப்பட்டால்ல், அதை ஸ்பீட்-இ பயனரால் மட்டுமே ரத்து முடியும். எனவே, நீங்கள் விரும்பும் போது டெலிவரி கட்டளைகளையும் பங்கு பத்திரங்கள் பரிமாற்றும் கட்டளைகளையும் சமர்ப்பிக்கவும், கணக்கைப் பூட்டி, தேவைப்படும்போது மட்டுமே அதை திறந்து, இதன் மூலம் உங்கள் கணக்கின் முழு கட்டுப்பாட்டையும் உங்கள் கைகளில் கொண்டு வாருங்கள்.

4. ஸ்பீட்-இ கடவுச்சொல் பயனர் முன் அறிவிக்கப்பட்ட தரகர்கள் கணக்குகளை மாற்ற முடியுமா?

முடியும், பத்திரங்கள் பரிமாற்ற செய்வதற்காக முன்பே அறிவிக்கப்பட்ட தரகர்கள் கணக்குகளை பயன்படுத்த, கடவுச்சொல் பயனர்களுக்கு அனுமதிக்கப்படும், மேலும் அதை மாற்ற வேண்டுமானால் டிபியிடம் அறிவிப்பதன் மூலம் மாற்றலாம். உங்கள் டிபி முறையாக அத்தாட்சி வழங்கிய பிறகு இந்த மாற்றங்கள் செயல்பாட்டிற்கு வரும்.

**ஐடிஇஏஎஸ்**

இணைய அடிப்படையிலான டீமேட் கணக்கு அறிக்கை (ஐடிஇஏஎஸ்) [Internet based Demat Account Statement (IDeAS)], டீமேட் கணக்கு வைத்திருப்பவர்களுக்கு டீமேட் கணக்கில் நடந்த பரிவர்த்தனைகளை பார்வையிட ஒரு இணைய அடிப்படையிலான வசதி ஆகும். கணக்கீட்டு நிலுவைத் தொகையோடு அதனுடனான மதிப்பீட்டைப் பார்க்கவும் கணக்கு வைத்திருப்பவர்களுக்கு உதவுகிறது. கணக்கு வைத்திருப்பவர்கள் முந்தைய 12 மாதங்களுக்கு பரிவர்த்தனைகளின் மாத வாரியாக அறிக்கையை பார்க்க / பதிவிறக்க முடியும். இந்த வசதியை நீங்கள் ஏற்கனவே பயன்படுத்தவில்லை எனில், உங்கள் டிபியிடம் பதிவிற்காக கோரிக்கை செய்யலாம் அல்லது https://eservices.nsdl.com/. இல்என்றஇணையத்தில் நீங்களே பதிவு செய்து கொள்ளலாம். கணக்கு வைத்திருப்பவர்களுக்கு இந்த வசதி முற்றிலும் இலவசமாக உள்ளது.

**என்எஸ்டிஎல் மொபைல் ஆப்**

டீமேட் கணக்கு வைத்திருப்பவர்களுக்கு மிகவும் பயனுள்ள மொபைல் பயன்பாட்டை என்எஸ்டிஎல் (NSDL) உருவாக்கியுள்ளது. நீங்கள் இதை கூகுள் பிளே ஸ்டோர் (Google Play Store) அல்லது ஏப் ஸ்டோரிலிருந்து (App Store) பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். இந்த பயன்பாட்டை நிலுவைகளை பார்வையிட மற்றும் ஒரு சிங்கிள் சைன் ஆன் (single sign-on) மூலம் ஆன்லைன் எனஎஸ்எல்டி இ (NSDL e-) வாக்களிப்பு முறையை பயன்படுத்த முடியும். கணக்கு வைத்திருப்பவர்களுக்கு இந்த வசதி முற்றிலும் இலவசமாக உள்ளது.

**இ-வோட்டிங்**

கணக்கு வைத்திருப்பவர்களுக்கு இந்த பயன்பாடு முற்றிலும் இலவசம் ஆகும். என்எஸ்டிஎல் (NSDL ) மின்னணு வாக்களிப்பு (இ- வாக்களிப்பு) தளம் ஒவ்வொரு பங்குதாரரும் அந்த இடத்தில் இல்லாமல் ஆன்லைன் மூலம் வாக்களிக்கும் வசதியை வழங்குகிறது. இந்த இ-வாக்களிப்பு சேவை ஸ்பீட்-இ மற்றும் என்எஸ்டிஎல்லின் மொபைல் ஆப் இரண்டிலும் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. கூடுதல் விவரங்களுக்கு இங்கு தொடர்பு கொள்ளவும். https://www.evoting.nsdl.com/.

**என்எஸ்டிஎல்லிலிருந்து மற்ற பயனுள்ள சேவைகள்**

## என்எஸ்டிஎல்லின் ஒருங்கிணைந்த கணக்கு ஸ்டேட்மெணட்

என்எஸ்டிஎல்NSDL ஒருங்கிணைந்த கணக்கு அறிக்கையை (சிஏஎஸ்) [Consolidated Account Statement (CAS)] ஒவ்வொரு டீமேட் கணக்கு வைத்திருப்பவருக்கு அவரது டீமேட் கணக்கு (கள்) மற்றும் பரஸ்பர நிதி முதலீட்டிற்கான கணக்கு ஆகியவற்றிர்க்கு ஸ்டேட்மெண்ட் வடிவத்தில் அறிக்கை அனுப்புகிறது. பங்குகள் பிரதான கணக்காளரின் வைத்திருப்பவரின் பேன் எண்ணை அடிப்படையாகச் சராசரியாக இருக்கும்.

a. அந்த மாதத்தில் ஏதேனும் பரிவர்த்தனை நிகழ்ந்திருந்தால் ஒவ்வொரு மாதத்திற்கும் ஆன ஸ்டேட்மெண்ட் அனுப்பப்படும். நீங்கள் உங்கள் இமெயில் முகவரியையும் அனுப்பி டிபிக்கு சம்மதமும் தெரிவித்திருந்தால் ஸ்டேட்மெண்ட் நேரிடையாக உங்கள் இமெயிலுக்கு வரும்.

b. அறிக்கை உங்கள் முதலீட்டின் ஒவ்வொன்றின் விலை, மொத்த தொகுப்பு மதிப்பு மற்றும் ஒரு குறிப்பிட்ட காலக்கட்டத்தில் மொத்த போர்ட்ஃபோலியோ மதிப்பு மாற்றங்களை காட்டும் வரைபடம் ஆகியவற்றைக் காட்டுகிறது.

c. இது உங்கள் கேஒய்சி இன்றைய தேதி வரை புதுப்பிக்கப்பட்டிருக்கிறதா, மின்னஞ்சல் முகவரி மற்றும் உங்கள் பரஸ்பர நிதி ஃபோலியோக்களில் குறிப்பிட்டுள்ள மொபைல் எண் போன்ற பிற விவரங்களையும் இது காட்டுகிறது.நீங்கள் இதில் எதாவது முரண்பாடை பார்த்தால் அல்லது விபரங்களை மேம்படுத்தல் தேவைப்பட்டால், நீங்கள் பரஸ்பர நிதி நிறுவனம் அல்லது அதன் பதிவாளரை தொடர்பு கொள்ளலாம்.

d. **ஒரு வேளை இந்த ஸ்டேட்மெண்ட் உங்களுக்கு கிடைக்கவில்லை என்றாலோ அல்லது அந்த ஸ்டேட்மெண்டில் ஏதேனும் முரண்பாடு உங்களுக்கு தெரிந்தால், தயவு செய்து உங்களுடைய டிபியினை உடனடியாக தொடர்பு கொள்ளுங்கள் அல்லது இந்த முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்புங்கள்** NSDL-CASfeedback@nsdl.co.in.

உங்கள் டீமேட் கணக்குகள் மற்றும் பரஸ்பர நிதி நிறுவனங்களில் உங்கள் ஒவ்வொரு முதலீட்டிற்குமான அறிக்கைகாலத்தையும் மற்றும் இறுதி பேலன்சை நீங்கள் சரிபார்க்க வேண்டும்.

**என்எஸ்டிஎல்** (NSDL) **தன்னுடைய டீமேட் கணக்குதாரர்கள் நேரிடையாக தங்களுடைய இமெயில் முகவரியை வழங்குவதற்காக** https://nsdlcas.nsdl.com/**இல் ஒரு ஆன்லைன் வசதியினை உருவாக்கியுள்ளது.**



என்எஸ்டிஎல்லிலிருந்து மின்னஞ்சல் மூலம் இ- சிஏஎஸ் (e-CAS) CAS ஐ பெறுவதற்கு இந்த வசதி செய்யப்பட்டுள்ளது. இ-சிஏஎஸ் (E-CAS) ஐப் பெறுவதற்கும் மின்னஞ்சல் ஐடியை மாற்றுவதற்கும் இந்த வசதியை பயன்படுத்தப்படலாம்.

**எஸ்எம்எஸ் எச்சரிக்கை வசதி**

1. எஸ்எம்எஸ் எச்சரிக்கை வசதி என்றால் என்ன?

டீமேட் கணக்கில் பதிவு செய்யப்பட்ட மொபைல் எண்ணில் எஸ்எம்எஸ் எச்சரிக்கைகள் அனுப்பியதன் மூலம் தங்கள் கணக்கில் நடக்கும் முக்கியமான பரிவர்த்தனைகளை கண்காணிக்கும் வகையில் என்எஸ்டிஎல் தன் கணக்குதாரர்களைத் தங்கள் கணக்கை கண்காணிப்பு செய்ய உதவுகிறது. விழிப்பூட்டல்கள் என்எஸ்டிஎல்லிலிருந்து நேரடியாக அனுப்பப்படும் போது, அவைகள் டீமேட் கணக்கின் உண்மையான நிலையை பிரதிபலிக்கின்றன. டீமேட் கணக்கு வைத்திருப்பவர்களுக்கு இந்த வசதி முற்றிலும் இலவசம்.

2. எஸ்எம்ஸ் எச்சரிக்கை வசதிக்கு நான் எவ்வாறு பதிவு செய்ய வேண்டும் ?

இந்த வசதியை ஏற்கனவே நீங்கள் பயன்படுத்தவில்லை என்றால், உங்கள் மொபைல் எண்ணைக் குறிப்பிட்டு உங்கள் டிபிக்கு எழுத்து வடிவத்தில் வேண்டுகோளை சமர்ப்பித்ததன் மூலம் உங்கள் மொபைல் எண்ணை பதிவு செய்யலாம். உங்கள்

மொபைல் எண் வெற்றிகரமாக பதிவு செய்யப்பட்டதும், எஸ்எம்எஸ் எச்சரிக்கைகள் பெறுவதற்கான எஸ்எம்எஸ் கொடியை உங்கள் டிபி மூலமாக டிபாஸிட்டரி முறையில் செயல்படுத்தப்படும் விழிப்பூட்டல்கள் செயல்படுத்தப்படும்.

டிபி க்கு தங்கள் மொபைல் எண்ணை பதிவு செய்ய விருப்பம் ஆனால் இந்த வசதி பெற விரும்பாத அந்த கணக்கு வைத்திருப்பவர்கள், அத்தகைய கணக்குகள் பவர் ஆ◌ஃப் அட்டர்னி மூலமாக இயக்கப்படவில்லை மற்றும் அடிப்படை சேவை டிமேட் கணக்காக இல்லாத பட்சத்தில் அதற்கான எஸ்எம்எஸ் ◌ஃப்ளாக் வசதியை செயலிழக்க செய்யச் சொல்லலாம்.

## 3. எந்த பரிவர்த்தனைகளுக்கு எஸ்எம்எஸ் எச்சரிக்கைகள் அனுப்பப்படுகின்றன?

நீங்கள் என்எஸ்டிஎல்லிலிருந்து நேரடியாக எஸ்எம்எஸ் பெறுவீர்கள் இவைகளுக்காக-

a. அனைத்து டெபிட் டிரான்ஸ்◌ஃபர்கள்.
b. ஐபிஓ, துணை பிரிவு மற்றும் போனஸ் ஆகியவற்றிர்க்கான பற்றுகள்.
c. தோல்வியடைந்த அறிவுறுத்தல்கள்
d. கட்டளைகள் செயல்படுத்தபடாமல் நின்றவைகள்
e. மொபைல் எண் மாற்றம்
f. முகவரி மாற்றம்
g. பரஸ்பர நிதி யூனிட்டில் டெபிட்டுகள்
h. பவர் ஆ◌ஃப் அட்டர்னி பதிவு செய்தல் மற்றும் செய்த பதிவை நீக்குதல்
i. மாற்றம், நியமனதாரர் பெயர் ரத்து / நீக்குதல்
j. அடமானம் துவக்கம், உறுதிப்படுத்தல் மற்றும் அழைத்தல் (அடகு வைப்பவருக்கு)
k. டெண்டர் வழங்குநர் அறிவுறுத்தலைப் பொறுத்து பங்குகள் தடை செய்தல் மற்றும் பங்குகளை பற்றுதல்.

டிபாஸிட்டரி முறையில் பவர் ஆ◌ஃப் அட்டர்னி இன் முகவரி, பதிவு மற்றும் பதிவு செய்ததை மாற்றுதல், கணக்கு வைத்திருப்பவர் இந்த வசதிக்காக தேர்வு ~~செய்யப்பட்டாரா இல்லையா என்பதைப் கணக்கில் எடு~~த்துக் கொள்ளாமல் எஸ்எம்எஸ் எச்சரிக்கைகள் பதிவுசெய்யப்பட்ட மொபைல் ◌ஃபோனுக்கு அனுப்பி வைக்கப்படும்.
டிமேட் கணக்கு பக்கம்

## 4. எஸ்எம்எஸ் விழிப்பூட்டல் வசதிக்கு நான் ஏன் பதிவு செய்ய வேண்டும் ?

பதிவு செய்யப்பட்ட மொபைல் எண்ணுக்கு டிமேட் கணக்கில் மேற்கொள்ளப்பட்ட பல முக்கியமான நடவடிக்கைகளுக்கு என்எஸ்டிஎல் நேரடியாக செய்திகளை அனுப்புகிறது. இது உங்கள் டிமேட் கணக்கை பாதுகாக்க பயனுள்ள கண்காணிப்பு முறையாக செயல்படுகிறது.

## 5. இந்த வசதியைப் பெறுவதற்கான கட்டணங்கள் எவ்வளவு?

கணக்கு வைத்திருப்பவருக்கு இந்த வசதி வழங்குவதற்காக டிபிகளுக்கு என்எஸ்டிஎல் கட்டணம் வசூலிப்பதில்லை.

## 6. டிமேட் கணக்கைத் திறக்கும் நேரத்தில் என் மொபைல் எண்ணை நான் டிபிக்கு கொடுத்திருக்கிறேன். இந்த வசதிக்காக நான் இருந்தாலும் பதிவு செய்ய வேண்டுமா?

நீங்கள் எஸ்எம்எஸ் விழிப்பூட்டல்களைப் பெறாவிட்டால், டிப்ஸிட்டரி அமைப்பில் எஸ்எம்எஸ் எச்சரிக்கை கொடியை இயக்க உங்கள் டிபிக்கு கோரிக்கை ஒன்றை வழங்க வேண்டும். வெறுமனே மொபைல் எண் கொடுப்பது மட்டும் போதாது.

## 7. எனது மொபைல் எண் மாறியிருந்தால் நான் என்ன செய்ய வேண்டும் ?

உங்கள் மொபைல் எண்ணை மாற்றினால், உங்கள் புதிய மொபைல் எண்ணை உங்கள் டிபிக்கு எழுத்து பூர்வமாகத் தெரிவிக்க வேண்டும். டெபாஸிட்டரி சிஸ்டத்தில் டிபியினால் மாற்றம் செய்யப்பட்டுவிட்டால், உங்கள் பழைய மற்றும் புதிய மொபைல் எண் இரண்டிலும் நீங்கள் செய்திகளை பெறுவீர்கள். நீங்கள் உங்கள் மொபைல் எண்ணை மாற்றியமைக்க நினைத்தால், நீங்கள் மொபைல் நம்பர் போர்டபிலிட்டியை தேர்வு செய்யலாம், இதன் மூலம் நீங்கள் உங்கள் சேவை வழங்குநரை மாற்றிக் கொள்ளலாம், ஆனால் நடப்பு மொபைல் எண்ணைத் தக்கவைத்துக்கொள்ளலாம்.

### 8. எஸ்எம்எஸ் விழிப்பூட்டலுக்கு பதிவு செய்ய வேண்டியது கட்டாயமா?

கிடையாது, அடிப்படை சேவை டிமேட் கணக்கு வைத்திருக்கும் தனிப்பட்ட கணக்குதாரர்கள் , தன் கணக்குகளை பவர் ஆஃப் அட்டர்னி மூலம் இயக்குபவர்களை தவிர மற்றவர்களுக்கு இந்த வசதி கட்டாயமில்லை, ஆனால் மிகவும் பரிந்துரைக்கப்படுகிறது. எச்சரிக்கைகள் நேரடியாக டெபாஸிட்டரியிடமிருந்து வருவதால், உங்கள் கணக்கில் நடக்கும் முக்கியமான பரிவர்த்தனைகளை கண்காணித்து, தேவையென்றால் நடவடிக்கைகளை எடுக்க உங்களுக்கு வசதியாக இருக்கும்.

**டிமேட் கணக்கில் பரஸ்பர நிதிகளை வைத்திருத்தல்**

எந்த சொத்து மேலாண்மை நிறுவனத்தால் வழங்கப்பட்ட பரஸ்பர நிதி யூனிட்களும் பிற வகை பாதுகாப்பு பத்திரங்களைப் போன்றே டிமேட் கணக்கில் வைத்துக் கொள்ளலாம். இது உங்கள் எல்லா முதலீடுகளையும் ஒரே இடத்தில் கண்காணிக்க உதவுகிறது. டிமேட் கணக்கு வைத்திருப்பவர்கள் என்எஃப்ஓ( NFO) / எஸ்ஐபி (SIP) க்காக விண்ணப்பிக்கலாம் மற்றும் டிமேட் கணக்கில் கடன் பெற வேண்டுகோள் நேரடியாக விண்ணப்பிக்கலாம்.

டிமேட் கணக்கு பக்கம்

### 1. மியூச்சுவல் ஃபண்ட் அலகுகள் (கணக்கின் அறிக்கையால் குறிப்பிடப்படும்) டிமேட்டாக மாற்றுவதற்கான அர்த்தம் என்ன?

நீங்கள் மியூச்சுவல் ஃபண்ட் அலகுகளை காகித வடிவில் வைத்திருந்தால், அது கணக்கு அறிக்கையின்(எஸ்ஓஏ) [Statement of Account(SOA)] மூலம் பிரதிநிதித்துவம் செய்யப்படும் நிலையில், அவற்றை டிமேட் படிவத்தில் வைத்திருக்க விரும்பினால், உங்கள் டிபிக்கு பரிந்துரைக்கப்பட்ட படிவத்தில் கோரிக்கையை சமர்ப்பிப்பதன் மூலம் நீங்கள் அவ்வாறு செய்யலாம். இது டிமேட் வடிவத்தில் பரஸ்பர நிதிய பிரிவுகளை மாற்றுவதாக அறியப்படுகிறது.

### 2. ஒரு வேளை எனக்கு ஒரு டிமேட் கணக்கு இல்லை என்றால், நான் என்ன செய்ய வேண்டும் ?

உங்களிடம் டிமேட் கணக்கு இல்லை மற்றும் உங்கள் பரஸ்பர நிதி முதலீட்டை டிமேட் வடிவத்தில் மாற்ற விரும்பினால், நீங்கள் எந்த என்எஸ்டிஎல் டிபி உடன் ஒரு டிமேட் கணக்கை திறக்க வேண்டும்.

### 3. மியூச்சுவல் ஃபண்ட் அலகுகளை டிமேட் வடிவத்தில் வைத்திருப்பதில் நன்மைகள் என்ன?

a. பரஸ்பர நிதிகள் உட்பட பல்வேறு பத்திரங்களில் உள்ள அனைத்து முதலீடுகளையும்

குறிப்பிடுகின்ற ஒரு ஒருங்கிணைந்த கணக்கு அறிக்கையை நீங்கள் பெற்றுக்கொள்கிறீர்கள். பரஸ்பர நிதியிலிருந்து பெறப்பட்ட பல்வேறு நிறுவனங்களின் அறிக்கைகளை நீங்கள் பார்க்க வேண்டியதில்லை .

b. உங்கள் டீமேட் கணக்கில் பதிவு செய்யப்பட்ட முகவரியில் மாறுதல் ஏற்பட்டால் அனைத்து சம்பந்தப்பட்ட வழங்குநர்கள் மற்றும் பரஸ்பர நிதி நிறுவனங்கள் / பதிவாளர் மற்றும் பரிமாற்ற முகவர்(ஆர்டிஏ ) [Registrar and Transfer Agent(RTA) ]ஆகியவற்றுடன் பதிவு செய்யப்படும். இவ்வாறு, அவற்றில் ஒவ்வொன்றும் தனித்தனியாகத் தகவல் தெரிவிக்க வேண்டிய தேவையை நீக்குகிறது.

c. ஐடியாஸ் (IDeAS) மற்றும் என்எஸ்டிஎல் மொபைல் பயன்பாடு போன்ற வசதிகளைப் பயன்படுத்தி, மிக விரைவான மற்றும் திறமையான முறையில் பரிவர்த்தனைகளையும், ஹோல்டிங்குகளையும் கண்காணிக்கலாம்.

d. உங்களுடைய டிமேட் கணக்கில் இருந்து பரஸ்பர நிதி யூனிட்களின் டெபிட்கள் பற்றி எஸ்எம்எஸ் எச்சரிக்கைகள் பெறுவீர்கள்.

e. நீங்கள் ஸ்பீட்-இ (SPEED-e )வசதிக்கு சந்தாதாரர் ஆவதுமூலம் பரஸ்பர நிதி யூனிட்களின் ஆன்லைன் மூலம் மீட்கும் வசதியையும் பெறலாம்.

## 4. மியூச்சுவல் ஃபண்ட் யூனிட்களை மாற்றுவதற்கான செயல்முறை (கணக்கு அறிக்கையின் மூலம் குறிப்பிடப்படுகிறது) டீமேட் வடிவத்தில் எப்படி மாற்றுவது?

ஸ்டேட்மெண்ட் ஆஃப் கணக்குடன் உங்கள் டிபிக்கு மாற்றுவதற்கான கோரிக்கை படிவத்தை (சிஆர்எஃப்) [Conversion Request Form (CRF) ] சரியாக பூர்த்தி செய்து டிபியிடம் சமர்ப்பிக்க வேண்டும். தேவையான பரிசோதனைகளுக்குப் பிறகு, உங்கள் டிபி உங்கள் ஏஎம்சி (AMC) / அதன் பதிவாளர் சம்பந்தமாக உங்கள் கோரிக்கையை முன்வைக்கும். ஏஎம்சி (AMC) / பதிவாளர் இருந்து உறுதிப்படுத்தப்பட்டவுடன், பரஸ்பர நிதிகள் உங்கள் டீமேட் கணக்கில் வரவு வைக்கப்படும்.



## 5. வெளி நாடு வாழும் இந்தியர்கள் அதாவது என்ஆர்ஐ. அந்தஸ்துக்கு கீழ் வைக்கப்பட்டிருக்கும் பரஸ்பர நிதிகளை டீமேட் வடிவத்தில் மாற்ற முடியுமா?

மாற்ற முடியும் ஆனால், என்ஆர்ஐ தகுதியுடன் டீமேட் கணக்கு திறக்கப்பட்டிருக்க வேண்டும்.

## 6. பரஸ்பர நிதிகள் அலகுக்கு பங்குச் சந்தை தளத்தின் மூலம் நான் எவ்வாறு வாங்கலாம்?

உங்கள் பங்கு தரகரிடம் உங்களுக்கு தேவையான அளவுடன் உங்கள் பங்குதாரர்களுக்கான சந்தா கட்டளை ஒன்றையும் கொடுக்க வேண்டும். உங்கள் தரகர் பங்கு பரிவர்த்தனை தளத்தில் உங்கள் கோரிக்கையை உள்ளிடுவார். ஏஎம்சி(AMC) இலிருந்து அலகுகள் பெற்ற பின்
/ பணம் செலுத்தும் நாளில் பதிவாளர், உங்களுடைய தரகர் / கிளியரிங் கார்பரேஷன் உங்களுடைய டீமேட் கணக்கில் தேவையான பரஸ்பர நிதி பிரிவுகளை பற்று வைக்க ஏற்பாடு செய்யும்.

## 7. என் டீமேட் கணக்கில் வைத்திருக்கும் பரஸ்பர நிதி யூனிட்களை எப்படி மீட்க

முடியும்?

உங்கள் டிபி அல்லது பங்கு வர்த்தகர் மூலமாக நீங்கள் டீமாட் வடிவத்தில் உங்கள் பரஸ்பர நிதி அலகுகளை மீட்டெடுக்கலாம். ஸ்பீட்-இ பயனர்கள் மீட்டெடுப்பு கோரிக்கை ஆன்லைனிலும் சமர்ப்பிக்கலாம்.

8. என் டிபி மூலமாக டிமேட் வடிவில் நடைபெற்ற பரஸ்பர நிதி பிரிவுகளை மீட்பதற்கான நடைமுறை என்ன?

நீங்கள் முறையாக பூர்த்தி செய்யப்பட்ட மீட்டெடுத்தல் படிவத்தை(ஆர்எஃப்)[Redemption Form (RF)] உங்கள் டிபி யிடம் சமர்ப்பிக்க வேண்டும். தேவைப்பட்ட பரிசோதனைகளுக்குப் பிறகு, உங்கள் டிபி உங்கள் கோரிக்கையை சம்பந்தப்பட் ஏஎம்சி ( AMC) / பதிவாளருக்கு அனுப்பிவைப்பார்கள். தேவையான சரிபார்ப்புகளை மேற்கொண்ட பிறகு, மீட்டெடுப்பு தொகை உங்கள் இணைக்கப்பட்ட வங்கிக் கணக்கில் நேரடியாக ஏஎம்சி ( AMC) / பதிவாளர் மூலமாக வரவு வைக்கப்படும். நீங்கள் ஒரு குறிப்பிட்ட அளவு அல்லது அனைத்து அலகுகளுக்கு அல்லது உங்கள் தேவையான அளவு மீட்டெடுப்பு கோரிக்கையை டிபியிடம் அளிக்கலாம்.

9. பங்கு வர்த்தகர் மூலம் டீமேட் வடிவத்தில் இருக்கும் பரஸ்பர நிதி அலகுகளை மீட்டெடுக்கும் நடைமுறை என்ன?

உங்கள் பங்கு வர்த்தகரிடம் விற்கும்படி உத்தரவு அளிக்க வேண்டும். கூடுதலாக, என்எஸ்இ கிளியரிங் லிமிடெட்(NSE Clearing Limited) / இந்திய க்ளியரிங் கார்ப்பரேஷன் லிமிடெட் (Indian Clearing Corporation Limited) என்ற நியமிக்கப்பட்ட சிஎம் பூல் கணக்கில் (CM Pool account) பரஸ்பர நிதி அலகுகளை மாற்ற உங்கள் டிபிக்கும் டெலிவரி இன்ஸ்டரக்ஷன் ஸ்லிப்பை சமர்ப்பிக்க வேண்டும்.



10. ஒரு டிமேட் கணக்கிலிருந்து மற்றொரு டிமேட் கணக்கிற்கு பரஸ்பர நிதி அலகுகளை நான் மாற்றலாமா?

முடியும். எந்தவொரு காரணத்திற்காகவும் லாக்-இன் நிலையில் (lock-in status) இருக்கும் பரஸ்பர நிதி அலகுகள் தவிர, உங்கள் விருப்பத் தேர்வைக்கேற்ப வேறு எந்த டீமேட் கணக்கிலும் (ஒரே டிபி/டெபாஸிட்டரியிடம் இருப்பதோ அல்லது வெவ்வேறு டிபி/டெபாஸிட்டரியில் இருந்தாலும்)பரஸ்பர நிதி அலகுகளை நீங்கள் மாற்றலாம்.

**டீமேட் கணக்கினை புதுப்பித்தல்/மாற்றங்கள் செய்தல்**

ஒரு டீமேட் கணக்கைத் திறந்த பின், கணக்கு திறந்த வடிவத்தில் வழங்கப்பட்ட தகவல்கள் மாற்றத்திற்கு உட்படும் சூழ்நிலைகள் ஏற்படலாம். எடுத்துக்காட்டாக-

a. கணக்கு வைத்திருப்பவர் பெயர்
b. கணக்கு வைத்திருப்பவரின் முகவரி
c. வங்கி கணக்கு விவரங்கள்
d. நியமிக்கப்பட்டவர் அல்லது பவர் ஆஃப் அட்டர்னி ஹோல்டர்
e. கணக்குதாரரின் கையொப்பம்
f. மின்னஞ்சல் முகவரி
g. தொலைபேசி / மொபைல் எண்

அத்தகைய சூழ்நிலையில், கணக்கு வைத்திருப்பவர் டிபியிம் முறையாக மாற்றப்பட்ட தகவலை வழங்க வேண்டும், அப்போதுதாந் டெபாஸிட்டரியில் பதிவு செய்யப்பட்ட தகவல்கள் புதுப்பிக்கப்பட்டு சேவைகள் குறுக்கீடு செய்யப்படாமல் தொடரும்.கணக்கு

வைத்திருப்பவர் தேவையான ஆதார ஆவணங்களுடன் டிபிக்கு கையொப்பமிட்ட எழுத்துபூர்வமான கோரிக்கையை வழங்க வேண்டும். கணக்குதாரர் டிபிக்கு முறையாக கையெழுத்திடப்பட்ட எழுத்துப்பூர்வமான கோரிக்கையை தேவையான அனைத்து ஆதரவு ஆவணங்களோடும் வைக்க வேண்டும்.

1. கணக்கை திறந்த பிறகு கணக்குதாரரின் பெயரை மாற்ற முடியுமா?

முடியும், டீமேட் கணக்கைத் திறந்தபின் ஒரு டீமேட் கணக்கில் கணக்கு வைத்திருப்பவரின் பெயர் மாற்றப்படலாம். எழுதப்பட்ட கோரிக்கையுடன் சேர்த்து வைக்க வேண்டிய தேவையான ஆதார ஆவணங்கள் விரும்பிய மாற்றத்தின் தன்மையை சார்ந்துள்ளது. டிபி செய்த எந்த தரவு நுழைவுப் பிழையின் காரணமாக கணக்கில் மாற்றம் தேவைப்படுகிறதென்று கணக்கு வைத்திருப்பவர் கோரிக்கை வைத்தால், கணக்கு வைத்திருப்பவரிடமிருந்து எந்த ஆவணமும் கேட்காமல் டிபி சுயமாகவே மாற்றத்தை செய்யலாம்.

a. சிறு திருத்தங்கள் என்றால் (எழுத்துப்பிழை திருத்தம், சுருக்கம் அல்லது இனிஷியல்களை விரிவுபடுத்துதல் போன்றவை) பெயர் சரியாக எழுதப்பட்ட பேன் அட்டை, பாஸ்போர்ட், வாக்காளர் அடையாள அட்டை, ஆதார் அட்டை, ஓட்டுனர் உரிமம், என்ஆர்இஜிஏ அட்டை NREGA card போன்ற அடையாள ஆவணங்களில் சுயஅத்தாட்சியுடன் கூடிய ஆவணத்தின் அடிப்படையில் இந்த சிறு மாற்றத்தை செய்யலாம். கணக்கு வைத்திருப்பவர் திருமணம், விவாகரத்து, நீதிமன்ற உத்தரவு ஆகிய எந்தவொரு காரணத்திற்காகவும் தனிப்பட்ட நபரின் பெயரில் மாற்றம் இல்லை என்பதையும் உறுதிப்படுத்தி கொள்ள வேண்டும். கணக்கீட்டாளர்கள் தங்கள் பெயரை வேறு ஏதாவது காரணத்திற்காக எண்கணிதம் போன்றவைக்காக இருந்தால் அதை பெயர் மாற்றமாக கருதப்படுமே அன்றி பெயரில் திருத்தம் இல்லை.

b. பெயர் மாற்றம் அல்லது திருத்தம் மற்ற நிகழ்வுகளில், பின்வரும் ஆவணங்கள் தேவை:



| திருமணத்தின் காரணமாக பெயர் மாற்றம் | திருமணம் அல்லாத காரணங்களுக்காக பெயர் மாற்றம் |
|---|---|
| திருமண சான்றிதழ் அல்லது கணவரின் பெயரைக் காட்டும் பாஸ்போர்ட் அல்லது அரசாங்க கெஜட்டில் பெயர் மாற்றத்தை வெளியிட்டதற்கான நகல். | அதிகாரப்பூர்வ அரசிதழில் அதாவது கெஜட்டில் பெயர் மாற்றம் அச்சிடப்படல் |

கர்நாடகா மற்றும் பஞ்சாபில் குடியிருப்பவர்களுக்காக அரசு கெஜட்டில் பெயர் மாற்றம் வெளியிடப்படும் வசதி இல்லாமல் இருக்கலாம், அப்போது கீழ்கண்ட ஆவணங்கள் வழங்கப்பட வேண்டும்-

a. பெயர் மாற்றுவதற்கான காரணத்தையும், அவரது முழுமையான முகவரியையும் குறிப்பிட்டுள்ள நோட்டரி பப்ளிக்/ ஃபர்ஸ் கிளாஸ் மேஜிஸ்ட்ரேட்/எக்ஸ்கியூட்டிவ் மேஜிஸ்ட்ரேட் முன்னிலையில் எடுத்துக் கொண்ட சத்திய பிரமாணம் வழங்கப்பட வேண்டும்.

b. ஒரு உள்ளூர் செய்தித்தாள் மற்றும் ஒரு தேசிய பத்திரிகையில் பெயர் மாற்றம் வெளியிடப்பட்டிருக்க வேண்டும்.

c. மாற்றியமைக்கப்பட்ட பெயருக்காந அடையாள ஆதாரம் மற்றும் முகவரி ஆவணம்

கணக்கு வைத்திருப்பவர் மேலே உள்ள ஆவணத்தின் ஒரு சுய சான்றிதழின் நகலை பரிசோதிப்பதற்காக அசல் ஆவணங்களுடன் சமர்ப்பிக்க வேண்டும்.

2. டீமேட் கணக்கில் பதிவு செய்யப்பட்ட எனது வங்கிக் கணக்கின் விவரங்களை மாற்றலாமா?

முடியும். உங்கள் டிபிக்கு எழுதப்பட்ட வேண்டுகோளை சமர்ப்பித்ததன் மூலம் எந்த நேரத்திலும் உங்கள் டீமேட் கணக்கில் பதிவு செய்யப்பட்டுள்ள வங்கி கணக்கு விவரங்களை மாற்றலாம். உங்கள் புதிய வங்கி கணக்கிற்கான ஆதார ஆவணங்களை வழங்க வேண்டும். உதாரணமாக, உங்கள் பெயர், வங்கி கணக்கு எண், வங்கி பெயர், MICR மற்றும் IFSC குறியீட்டைக் கொண்ட பாஸ் புக் அல்லது கணக்கு அறிக்கை அல்லது இரத்து செய்யப்பட்ட காசோலை நகல் ஆகியவற்றை சமர்ப்பிக்க வேண்டும்.

3. எனது முகவரி மாற்றப்பட்டால் நான் என்ன செய்ய வேண்டும்? நான் ஒவ்வொரு நிறுவனத்திற்கும் தனியாக எழுத வேண்டுமா?

உங்கள் முகவரி மாறியிருந்தால், புதிய முகவரியை உங்கள் டிபி க்கு தெரிவிக்க வேண்டும். டிபி புதிய முகவரியினை டெபாசிட்டரி சிஸ்டத்தில் நுழைக்கும்போது, அது தானாகவே நீங்கள் பங்குகளை / அலகுகளை வைத்திருக்கும் அனைத்து நிறுவனங்களுக்கும் தெரிவிக்கப்பட்டு விடும்.



4. எனது முகவரியை டிபியில் எவ்வாறு மாற்ற வேண்டும்?

உங்கள் டிபிக்கும் ஒரு எழுதப்பட்ட வேண்டுகோளை சமர்ப்பித்து, உங்கள் முகவரியை டெபாஸிட்டரி சிஸ்டத்தில் மாற்றலாம். கணக்கு கூட்டாக வைத்திருந்தால் அத்தகைய வேண்டுகோளில் அனைத்து கூட்டு வைத்திருப்பவர்களாலும் கையெழுத்திடப்பட்டிருக்க வேண்டும். பின்வரும் ஆவணங்களை வேண்டுகோளுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும் -

a. டீமேட் கணக்கின் சமீபத்திய பரிவர்த்தனை அறிக்கை (வாடிக்கையாளர் டிபியை தனிப்பட்ட முறையில் சந்தித்தால் தேவையில்லை).

b. பேன் அட்டை, பாஸ்போர்ட், வாக்காளர் அடையாள அட்டை, ஆதார் அட்டை, ஓட்டுனர் உரிமம், என்ஆர்இஜிஏ அட்டை போன்ற அடையாள ஆவணத்தின் ஏதாவது ஒன்றில் சுய சான்றிதழ் செய்யப்பட்டதின் நகல்.

c. புதிய முகவரிக்கான அத்தாட்சியாக, வாக்காளர் அடையாள அட்டை, ஆதார் அட்டை, ஓட்டுனர் உரிமம் ஆகிய ஏதாவது ஒன்றில் சுய அத்தாட்சி செய்து அளித்தல்.

உங்கள் டிபியிடம் நகலை சரிபார்க்கும் நோக்கத்திற்காக அசல் ஆவணம் வழங்கப்பட

வேண்டும். நீங்கள் அல்லது உங்கள் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி பங்கேற்பாளரின் அலுவலர்களின் முன்னிலையில் விண்ணப்பத்தில் மீண்டும் ஒருமுறை கையொப்பமிட வேண்டும். முகவரியில் மாற்றத்திற்கான கோரிக்கை டெபாஸிட்டரி சிஸ்டத்தில் செயல்படுத்தப்பட்டவுடன், கணக்கு வைத்திருப்பவருக்கு (களுக்கு), சமீபத்திய மாற்றத்தை தெரிவிக்க என்எஸ்டிஎல்லிருந்து ஒரு மின்னஞ்சல் வருவதோடு டிபியிடமிருந்தும் செய்தி வரும்.

**டீமேட் கணக்கில் கார்பரேட் அனுகூலங்களை பெறுதல்**

1. பதிவு தேதியின் முக்கியத்துவம் என்ன?

எந்தவொரு கார்ப்பரேட் நன்மையும் விநியோகிக்கப்படுவதற்கான நோக்கத்திற்காக பங்குதாரர்களின் பட்டியலைக் கருத்தில் கொண்டு ஒரு கட் ஆ்ஃப் நாள் அதாவது அந்த நாளோடு முற்றுபெறும் என்று கொள்ளலாம் அந்த நாளே பதிவு தேதியாகும். 'பதிவு நாளில்' உங்கள் பெயர் பங்குதாரர்ரகளின் பெயர் பட்டியலில் இருந்தால் நிறுவனம் அளிக்கும் அனுகூலங்களைப் பெறுவதற்கான முழுதகுதிக்கும் நீங்கள் ஆளாகிறீர்கள். ஆகையால், நீங்கள் வாங்கிய பத்திரங்கள் பதிவு செய்யப்படுவதற்கு முன்னர், உங்கள் தரகர் மூலம் உங்கள் கணக்கில் பதிவு தேதிக்கு முன்னர் மாற்றப்படுவதை உறுதிப்படுத்துவது உங்களுக்கு முக்கியம் ஆகும்.

2. என் ஈவுத் தொகை / வட்டி அல்லது இதர பண உரிமங்களை நான் எப்படி பெறுவேன்?

சம்பந்தப்பட்ட நிறுவனம் என்எஸ்டிஎல்லிருந்து (NSDL) பதிவு தேதி வரையிலான பயனாளிகளின் விவரங்களை பெறுகிறது. டீமேட் கணக்கு வைத்திருப்பவரின் இணைக்கப்பட்ட வங்கிக் கணக்கில் நிறுவனத்தால் நேரடியாக செலுத்தப்படுகிறது.



3. பங்குகளை நான் டீமேட் வடிவத்தில் வைத்திருந்தால் போனஸ் பங்குகளை நான் எப்படி பெறுவேன்?

சம்பந்தப்பட்ட கம்பெனி, பதிவு தேதி அன்று, என்எஸ்டிஎல்லிலிருந்து (NSDL) பயனீட்டாளர் விவரங்களையும், மற்றும் அவர்களின் பங்குகளை பற்றிய விவரங்களையும் பெறுகிறது. உங்களுக்கு உரிமையுள்ள பங்குகளின் எண்ணிக்கை, நிறுவனம் / அதன் ஆர்டிஏ மூலம் உங்கள் டீமேட் கணக்கில் வரவு வைக்கப்படும்.

4. என் டீமேட் கணக்கில் வரவு வைக்கப்பட்ட போனஸ் / உரிமைகள் சரியாக உள்ளது என்பதை நான் எப்படி உறுதிப்படுத்துவேன்?

போனஸூக்கான ஆர்டிஏ / உரிமைகள் வழங்குதல் ஆகியவை மூலமாக பங்கு வழங்கும் நிறுவனம் பங்கீடு ஒதுக்கிடு செய்ததை தெரிவிக்கும். நீங்கள் பெறும் டீமேட் கணக்கு அறிக்கையுடன் அதை நீங்கள் சரிபார்க்க வேண்டும். நிறுவனத்திலிருந்து ஒதுக்கிடு பற்றி வந்த செய்தி மற்றும் கணக்கு அறிக்கையில் காண்பிக்கப்படும் வரவு வைக்கப்பட்ட பங்குகளின் அளவு இரண்டும் பொருந்த வேண்டும்.

## என்எஸ்டிஎல் சேவைகளில் மாற்றங்கள்

1. கணக்கு திறப்பு மற்றும் பிற வைப்புத்தொகை தொடர்பான பரிமாற்றங்களுக்கான கட்டணம் என்ன ?

என்எஸ்டிஎல் டிபிக்களிடம் கட்டணம் வசூலிக்குமே தவரி டீமேட் ஹோல்டர்களிடம் கட்டணம் வசூலிக்காது. டிபிக்களுக்கான என்எஸ்டிஎல் கட்டணங்கள் நிலையானது. **டிபிக்கள் மூலம் என்எஸ்டிஎல்லுக்கு கட்ட வேண்டிய கட்டணங்களின் முழு விவரங்கள் இந்த இணையதளங்களில் கிடைக்கும்** https://nsdl.co.in/joining/fee-payable-by-depository-participants.php.

தனது வாடிக்கையாளருக்கு வழங்கிய சேவைகளுக்கு டிபி கட்டணம் விதிக்கின்றது. டிபி பல்வேறு சேவைகளுக்கு உங்களிடம் வசூலிக்கும் கட்டணங்கள் பற்றி கணக்கு திறக்கும் நேரத்தில் உங்களுக்கு அளிக்கப்படும் 'கட்டண படிவத்தில்' குறிப்பிடப்பட்டுள்ளன. உங்கள் எதிர்கால குறிப்புக்கு இதன் ஒரு நகலை நீங்கள் வைத்திருக்க வேண்டும். உங்கள் டிபி விரும்பினால், உங்களுக்கு 30 நாட்கள் அறிவிப்பு வழங்கிவிட்டு கட்டணங்களை மாற்றலாம்.

## உங்கள் டீமேட் கணக்கை பார்த்துக் கொள்ளுதல்

1. டிஐஎஸ்ஸை செயல்படுத்தும் தேதியை குறிப்பிடாமல் இருப்பது சரியா?

சரியில்லை. நிறைவேற்ற வேண்டிய தேதியை குறிப்பிடாமலே உங்கள் டிபிக்கு டெலிவரி இன்ஸ்டரக்ஷன் சீட்டுகளை (டிஐஎஸ்)[delivery instruction slips (DIS)] நீங்கள் சமர்ப்பிக்கக்கூடாது. இந்த சீட்டில் உங்கள் கணக்கில், குறிப்பிட்டுள்ள தேதியில் ~~உங்கள் கணக்கிலிருந்து இந்திந்த பங்கு பத்திரங்கள் இ~~ந்தளவில் டெபிட் செய்ய டிமேட் கணக்கு பக்கம் வேண்டும் என்பதை நீங்கள் குறிப்பிட வேண்டும். சந்தை கட்டளையாக இருந்தால், அது பணம் கொடுக்கப்படும் தேதிக்கு முன்பாக இருக்க வேண்டும். ஆஃப்-சந்தை இடமாற்றங்களாக இருந்தால், இது உங்கள் விருப்பத்தின் படி எதிர்கால தேதியாக இருக்கலாம்.

2. ஒவ்வொறு பரிவர்த்தனைக்கு பின்னரும் என் டிபி என் கணக்கை மேம்படுத்தியிருப்பதை நான் எப்படி அறிவேன் ?

உங்கள் கணக்கின் நிகழ்வுகள் கண்காணிக்க உதவுவதற்காக அவ்வப்போது பரிமாற்றங்கள் மற்றும் நிலுவைத் தொகையைக் காட்டும் கணக்கு அறிக்கையைப் பெறுவீர்கள். எஸ்எம்எஸ் எச்சரிக்கைகள், ஐடியாஸ் (IDeAS) மற்றும் மொபைல் ஆப் போன்ற வசதிகளைப் பயன்படுத்தி நீங்கள் இதை கண்காணிக்கலாம்.

3. எந்த காலக்கெடுவிற்குள் நான் என் கணக்கு அறிக்கையை பெற வேண்டும்?

குறிப்பிட்ட மாதத்தில் (காலாண்டில்) பரிவர்த்தனைகள் இருந்தால் மாதந்தோறும்

(பிஎஸ்டிஏ (BSDA )கணக்கு வைத்திருப்பவர்களுக்கு காலாண்டு இடைவெளியில்) உங்களுக்கு ஒரு ஒருங்கிணைந்த கணக்கு அறிக்கையை என்எஸ்டிஎல் (NSDL) வழங்குகிறது. கணக்கில் பரிவர்த்தனை எதுவும் இல்லாவிட்டால், அல்லது அந்த ஆண்டில் பங்குபத்திரங்கள் இல்லவேயில்லை என்றால் , அறிக்கை ஆண்டுதோறும் வாடிக்கையாளர்களுக்கு அனுப்பப்படும்.

### 4. என் கணக்கு அறிக்கையில் ஏதாவது முரண்பாடு இருந்தால் நான் என்ன செய்ய வேண்டும் ?

கணக்கு அறிக்கையில் எதேனும் முரண்பாடு இருந்தால் உடனடியாக உங்கள் டிபியைத் தொடர்பு கொள்ள வேண்டும். டிபி மட்டத்தில் முரண்பாட்டை தீர்க்க முடியாது என்றால், நீங்கள் என்எஸ்டிஎல்லை (NSDL) அணுக வேண்டும்.

### 5. என் கணக்கு அறிக்கையை நான் தொலைத்து விட்டால் நான் என்ன செய்ய வேண்டும்?

கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை. நீங்கள் விரும்பும் காலத்திற்கு உங்கள் அறிக்கையை வழங்குவதற்கு என்எஸ்டிஎல்லை நீங்கள் கோரலாம். இந்த அறிவிப்பு தொலைந்து போகாமல் இருக்கவும் உங்களை வந்து சேரும் இடைக்காலத்தில் காணாமல் போவதை தடுக்கவும் நீங்கள் இ-சிஏஸ்(e-CAS) ஸைத் தேர்வு செய்யலாம். ஐடியாஸ் (IDeAS)மற்றும் மொபைல் ஆப் போன்ற வசதிகளைப் பயன்படுத்தி உங்கள் கணக்கு அறிக்கையைப் நீங்கள் எப்போது வேண்டுமானாலும் பார்க்கவும், பதிவிறக்கமும் செய்யலாம் .

### 6. கணக்கை முடக்குவதன் பொருள் என்ன? இதை எப்படி செய்வது?

டீமேட் கணக்கில் ஏதேனும் பரிவர்த்தனை செய்யவேண்டும் என்றால் அது ~~கணக்கு வைத்திருப்பவரிடமிருந்து சரியான கட்ட~~ளைகளில் வந்தால் மட்டுமே டீமேட் கணக்கு பக்கம் சாத்தியமாகும். கூடுதலாக, டிபி யிடமுள்ள டெபாஸிட்டரி மென்பொருளின் உள்ளீடுகளை மேக்கர் செக்கர் (maker checker )முறை மூலம் சரிபார்ப்பு முறையால் சாத்தியமாக்க முடியும். கணக்கில் நடக்கும் எந்தவொரு விரும்பாத பரிவர்த்தனைக் தடை போடவும், டிபிக்கு எழுதப்பட்ட வேண்டுகோளை சமர்ப்பிப்பதன் மூலம், டீமேட் கணக்கு வைத்திருப்பவர் தன்னுடைய டீமேட் கணக்கை முடக்கலாம். பின்வரும் வகையான முடக்கங்கள் கிடைக்கின்றன -

a. டெபிட்டுகளுக்கு மட்டுமே முடக்கம் - ஒரு டீமேட் கணக்கு வைத்திருப்பவர் டிபிக்கு முடக்கும் கட்டளை கொடுப்பதன் மூலம் தன் கணக்கில் டெபிட்டுகள் நிகழுவதை மட்டும் முடக்கலாம். எனினும், முடக்கம் காலத்தில், கணக்கு வைத்திருப்பவர் தொடரந்து

   வேறு எந்த கார்ப்பரேட் நடவடிக்கைகளிலிருந்து வரும் போனஸ் அல்லது வரவுகளை போன்ற பற்றுகளை பெறுவார்.

b. பற்று மற்றும் டெபிட்டுகளுக்கான முடக்கம் - ஒரு கணக்கு வைத்திருப்பவர் பற்றுகள் மற்றும் டெபிட்டுகளுக்கான கணக்கை முடக்கலாம். கணக்கு வைத்திருப்பவர் முடக்கத்தை நீக்குவதற்கான கட்டளை வழங்காத வரையில் கணக்கில் எந்த பற்றுகளும் டெபிட்களும் செய்யப்படாது. நீண்ட காலமாக தங்கள் கணக்கைப் பயன்படுத்தாத வாடிக்கையாளர்களுக்கு இந்த வசதி

பயனளிக்கிறது. பற்றுகள் மற்றும் டெபிட்களுக்கான தங்கள் கணக்கை முடக்குவதன் மூலம், தங்களின் கணக்கில் அனாவசியமான பற்றுகளை தவிர்க்கலாம்.

c. கணக்கில் குறிப்பிட்ட ஐஎஸ்ஐஎன் (கள்)[ISIN(s) ] முடக்கம் - ஒரு கணக்கு வைத்திருப்பவர் முழுமையான கணக்கை முடக்காமல், ஒரு குறிப்பிட்ட ஐஎஸ்ஐஎன் (கள்)களை (ஒரு குறிப்பிட்ட நிறுவனத்தின் பங்கு பத்திரத்தை மட்டும்) ‘டெபிட்’ அல்லது ‘டெபிட் மற்றும் கிரெடிட்’ டை முடக்கலாம். இந்த வகையான முடக்கும் வசதி பயன்படுத்தப்பட்டால், கணக்கில் உள்ள மற்ற அனைத்து பங்கு பத்திரங்களும் பற்று வைக்கப்படும் அல்லது டெபிட் செய்யப்படும் , ஆனால் குறிப்பிட்ட ஐஎஸ்ஐஎன் (களின்) கீழ் பத்திரங்கள் 'டெபிட்' அல்லது 'டெபிட் & பற்று ‘ இரண்டும் முறையே முடக்கப்படும். வாடிக்கையாளர் தன் டீமேட் கணக்கில் இருக்கும் மற்ற பத்திரங்களைப் பயன்படுத்த முடியும் மற்றும் டெபிட் மட்டும் முடக்கப்பட்ட ஐஎஸ்ஐஎன்(ISIN )இன் பற்றுகளைப் பெற முடியும்.

d. ஒரு கணக்கில் ஐஎஸ்ஐஎன்(ISIN) இன் கீழ் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையிலான பத்திரங்களை முடக்கலாம். கணக்கு வைத்திருப்பவர் தன்னுடைய கணக்கில் ஒரு குறிப்பிட்ட பத்திரங்களை ஒரு குறிப்பிட்ட அளவுக்கு முடக்கலாம்.

## 7. என் டிபி திவாலானாலோ அல்லது செயல்படுவதை நிறுத்தினாலோ என்ன நடக்கும்?

உங்கள் டிபி திவாலாவது அல்லது அதன் செயற்பாடுகளை மூடுவது போன்ற அரிய நிகழ்வில், டீமேட் கணக்குதாரர்களின் நலன்கள் முழுமையாக ~~பாதுகாக்கப்படுகின்றன. இத்தகைய சூழ்நிலையில்~~, உங்களுக்கு
டிமேட் கணக்கு பக்கம்

உங்களுடைய நிலுவைத் பங்குகளை உங்கள் விருப்பப்படி வேறு டிபிக்கு மாற்றுவதற்கோ அல்லது மறுபடியும் உங்கள் விருப்பப்படி காகித அத்தாட்சிகளாக மாற்றுவதற்கோ உங்களுக்கு உரிமை வழங்கப்படுகிறது.

## 8. வைப்புத்தொகையில் தரவை பாதுகாக்க என்எஸ்டிஎல் (NSDL) என்ன முன்னெச்சரிக்கைகள் எடுக்கிறது ?

தரவு பாதுகாப்பு மற்றும் தரவு ஒருங்கிணைப்பு ஆகியவை முக்கியமானதாக கருதப்படுகின்றன மற்றும் என்எஸ்டிஎல்லால் (NSDL) மிக உயர்ந்த முக்கியத்துவத்தை அளிக்கப்படுகிறது. என்எஸ்டிஎல்(NSDL) இந்த விஷயத்தில் மிக உயர்ந்த தரத்தை பின்பற்றுகிறது. டிபிக்கள் வாடிக்கையாளர்களின் தரவு மற்றும் சொத்துகள் பாதுகாப்பாக இருப்பதை உறுதி செய்ய சிறந்த நடைமுறைகளை பின்பற்ற வேண்டும் .

இது தொடர்பாக என்எஸ்டிஎல் பின்பற்றும் சில நடவடிக்கைகள் பின்வருமாறு:

a. டிபி நிலை மற்றும் டெபாஸிட்டரி நிலையில், தரவு அன்றைய தேதி வரையில் டேட்டாக்களின் பேக் அப் (back up) எடுத்து வைத்திருக்க வேண்டும். தேவைப்படும்

b. பேக் அப்புகளை டிபிக்கள் தங்கள் இடத்திலோ அல்லது தூரமாகவோ

வைத்திருக்கலாம் ஆனால் தினசரி பேக்அப் வைத்திருக்க வேண்டும்.

c. என்எஸ்டிஎல் ஒரு பேக் அப் சைட்டை(backup site) பராமரிப்பதோடு, இடர்பாடுகள் இல்லாமல் தொடர்ந்து சேவைகள் கிடைக்க வசதியாக ஒரு பேரழிவு மீட்பு தளத்தையும்ம் (Disaster Recovery Site) பராமரிக்கிறது.

d. தரவு கையாளுதல் மற்றும் சைபர் பாதுகாப்பு கட்டமைப்பு ஆகியவற்றைப் பொறுத்தவரையில் சிறந்த தொழில் நடைமுறைகள் பின்பற்றப்படுகின்றன .

e. முக்கியமான உபகரணங்கள், அத்தியாவசிய தேவையான கருவிகள், தகவல்தொடர்பு அமைப்புகள் மற்றும் டெபாஸிட்டரிக்கு பயன்படும் பயன்பாடுகள் ஆகியவற்றை மீளமைத்தலுக்கு ஃபால் பேக் (Fall back)தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுகிறது.

f. தொழில்ரீதியாக வல்லுனர்கள் மற்றும் தகுதிவாயந்தவர்களால் நிர்வகிக்கப்படும் தரவு சென்டரிலேயே டேட்டாக்கள் சேமிக்கப்படுகின்றன.

g. தருக்க மற்றும் உடல் ரீதியாக அணுகல் ஆகியவைகளை தடை விதிக்கும் பல்வேறு நிலைகள் பின்பற்றப்படுகின்றன.

h. டெபாஸிட்டரியில் முக்கியமான டேட்டா எண்ட்ரிக்கு மேக்கர்( Maker) சரிபார்ப்பு முறை பின்பற்றப்படுகிறது.

i. என்எஸ்டிஎல்(NSDL) ஆனது ISO - 27001 சான்றிதழையும் (தகவல் பாதுகாப்பு மேலாண்மை) ISO 22301:2012 சான்றிதழ்களை (வர்த்தக தொடர்ச்சி மேலாண்மை அமைப்புகளுக்காக) பெற்றிருப்பது அது சிறந்த தொழில்முறை நடைமுறைகளுடன் இணங்குவதைக் குறிக்கிறது.

---

டிமேட் கணக்கு பக்கம்

## 9. டிபக்கள் நிர்ணயிக்கப்பட்ட தேவைகளை பின்பற்றுகிறார்களா என்பதை என்எஸ்டிஎல் எவ்வாறு உறுதி செய்து கொள்கிறது?

அனைத்து டிபிகளும் குறைந்தபட்சம் ஒரு வருடத்திற்கு ஒருமுறை என்எஸ்டிஎல்லின் ஆய்வுக்கு உட்படுத்தப்படுகின்றன. கூடுதலாக, அவர்கள் தங்களுடைய டெபாஸிட்டரி செயல்பாடுகளை தணிக்கை செய்ய சுயாதீன மற்றும் தகுதி வாய்ந்த தணிக்கையாளரை ஈடுபடுத்த வேண்டும். அத்தகைய தணிக்கை அறிக்கை என்எஸ்டிஎல்லுக்கு வருடத்திற்கு இரண்டு முறை அனுப்பப்பட வேண்டும். டிபிகள் செபி(SEBI)யாலும் பரிசோதிக்கப்படுகின்றன.

## 10. என்எஸ்டிஎல் எந்த அரசாங்க அதிகாரத்திற்கு கட்டுப்படுத்தப்படுகிறதா ?

செபியால், செக்யூரிட்டி டெபாசிட்டரியாக செயல்பட என்எஸ்டிஎல்லுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. என்எஸ்டிஎல் கம்பெனி சட்டம் 2013 இன் படி மற்ற பொருந்தக்கூடிய தணிக்கைக்கு உட்படுத்தப்படுவேதோடு கூடுதலாக செபி(SEBI) ஆல் அவ்வப்போது ஆய்வுக்கு உட்படுத்தப்படுகிறது.

## 11. டெபாஸிட்டரி நடவடிக்கைகளுக்கு எவ்வித காப்பீடு பாதுகாப்பு உள்ளதா?

என்எஸ்டிஎல் அனைத்து டிபீக்களின் சார்பாக காப்பீட்டைப் பெறுகிறது.

**கூடுதல் விபரங்கள்**

## கிடைக்காத ஈவுத்தொகை/பங்குகளை கோறுதல்

ஏதேனும் காரணங்களால் ஏழு தொடர்ச்சியான ஆண்டுகளுக்கு செலுத்தப்படாத அல்லது மறுக்கப்படாத அனைத்து ஈவுத்தொகைகள் மற்றும் பங்குகள், முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதியம்(ஐஇபிஎஃப்)[ Investor Education and Protection Fund(IEPF)] ஆணையத்திடம் அந்தந்த நிறுவனங்களால் மாற்றப்படுகின்றன. ஐஇபிஎஃப் (IEPF) ஆணையம் கம்பெனிகள் சட்டம் 2013 விதிகளின் கீழ் அமைக்கப்பட்ட ஒரு சட்டரீதியான அமைப்பு ஆகும்.

முதலீட்டாளர் அல்லது அவரது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிக்கு செலுத்தப்படாத ஈவுத்தொகை மற்றும் / அல்லது வாங்கப்படாத பங்குகளை பெற ஐஇபிஎஃப் (IEPF) அதிகாரியிடம் கோரிக்கை சமர்ப்பிக்க வேண்டும். இந்த கூற்றை சரிபார்த்த பிறகு,ஐஇபிஎஃப் (IEPF) அதிகாரியிடம் நிறுவனம் உறுதிப்படுத்திய பிறகு அவருடைய இணைக்கப்பட்ட வங்கிக் கணக்கில் உரிமைகோருபவருக்கு மின்னணு பரிமாற்றத்தின் மூலம் செலுத்த வேண்டிய பணம் செலுத்தப்படுகிறது. ஒரு வேளை கோரிக்கை பங்குகளாக இருந்தால், அவர்கள் கோரிக்கை படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள டிமேட் கணக்கில் குறிப்பிட்ட பங்குகள் வரவு வைக்கப்படுகின்றன. முழுமையான செயல்முறை மற்றும் ஆவணங்கள் கீழே உள்ள வரைபட எண் 8 இல் காட்டப்பட்டுள்ளன. ஒரு விண்ணப்பதாரர் ஒரு நிதியாண்டில் ஒவ்வொரு நிறுவனத்திற்கும் ஒரு உரிமைகோரல் படிவத்தை பதிவு செய்யலாம். கூடுதல் விவரங்களுக்கு இங்கு தொடர்பு கொள்ளவும். http://www.iepf.gov.in/.எல்லா கம்பெனிகளும் அவற்றிடம் கோரப்படாத பங்குகள் மற்றும் ஈவுத்தொகை விவரங்களை தங்கள் இணையதளத்தில் வெளியிட வேண்டும் என்பது முக்கியம்.

## திரும்பக் கோறும் முறை




கோரிக்கையை சரிபார்த்தவுடன் திரும்பத் தரவேண்டிய

பத்திரங்கள் அல்லது பணம் கோரிக்கையாளரிக்கு மின்னனு

வரைபடம் 8

## பங்கு பத்திரங்களை மாற்றுவதற்கு டீமேட் கட்டாயமாகும்

டிமேட் கணக்கு புத்தகம்

2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 1 ம் தேதியிலிருந்து செபி கட்டாயமாக்கியிருக்கிறது அதாவது பட்டியலிடப்பட்ட நிறுவனங்களின் பத்திரங்களை மாற்றுவதற்கு டீமேட் வடிவத்தில் மட்டுமே இருக்கும் என்று செபி உத்தரவிட்டுள்ளது. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், நீங்கள் ஒரு பட்டியலிடப்பட்ட நிறுவனத்தின் பங்குகளை காகித வடிவத்தில் வைத்திருந்தால், அதை வேறு யாராவது மாற்ற விரும்பினால், அவற்றை ஏப்ரல் 1, 2019 முதல், டீமேட் வடிவில் மாற்றுவதன் மூலம் மட்டுமே அவ்வாறு செய்ய முடியும். இந்த தேதியில் இருந்து (பங்குதாரரின் இறப்பினால் பங்குகள் பரிமாற்றம்) மற்றும் இடமாற்றம் (அந்த பங்குதாரர்களின் பெயர்கள் வரிசையை மாற்றுதல்) ஆகியவை காகித வடிவத்தில் வைத்திருக்கும் பங்குகளுக்கு அனுமதிக்கப்படும். எனவே ஒரு டீமேட் கணக்கை திறந்து, உங்கள் பங்குகளை சீக்கிரமாகவே டீமேட்டில் மாற்றுவது நல்லது.

பட்டியலிடப்படாத பொது நிறுவனங்களுக்கு டீமேட் கட்டாயம் ஆகும். நிறுவன விவகாரங்கள் அமைச்சு (MCA) செப்டம்பர் 10, 2018 அன்று ஒரு அறிவிப்பை வெளியிட்டது.

பட்டியலிடப்படாத பொது வரையறுக்கப்பட்ட நிறுவனங்கள் டெபாசிட்டரி முறையில் சேர வேண்டும் மற்றும் அவற்றின் பங்குகளை தத்தெடுப்பிற்கு கிடைக்கச் செய்ய வேண்டும் என்று அறிவுறுத்துகின்றன. கூடுதலாக இந்த நிறுவனங்களின் பங்குகளை வழங்குவது டீமேட் வடிவத்தில் மட்டுமே சாத்தியமாகும். இந்த தேவைகள் இருவரும் அக்டோபர் 2, 2018 முதல் அமலுக்கு

வருகின்றன. அத்தகைய நிறுவனங்களில் பங்குகளை வைத்திருப்பவர்கள் தங்களின் பங்குகளை டீமேட் வடிவத்தில் மாற்றலாம் மற்றும் தொடர்புடைய நன்மைகளைப் பெறலாம். நீங்கள் ஏற்கனவே டீமேட் கணக்கை வைத்திருந்தால், இந்த பங்குகளை வைத்திருப்பதற்காக மற்றொரு டீமேட் கணக்கை நீங்கள் திறக்க வேண்டாம். காகித வடிவத்தில் உள்ள உங்கள் முதலீடுகள் அதே வடிவத்தில் இருக்குமேயானால், அதே டிமேட் கணக்கில் டிமேட் படிவமாக மாற்றப்படலாம்.

## முதலீட்டாளர் விழிப்புணர்வு நிகழ்வுகள்

நாடு முழுவதும் முதலீட்டாளர் விழிப்புணர்வு திட்டங்களை NSDL ஏற்பாடு செய்கிறது. இத்தகைய திட்டங்களின் அட்டவணை https://nsdl.co.in/Investor-Awareness-Programmes.php இல் கிடைக்கிறது . உங்கள் வீடமைப்பு சமுதாயத்தில், நிறுவனம், நிறுவனம் அல்லது நகரத்தில் முதலீட்டாளர் விழிப்புணர்வு திட்டத்தை நீங்கள் ஏற்பாடு செய்ய விரும்பினால், info@nsdl.co.in இல் எழுதவும் .

## முதலீட்டாளர்களுக்கான என்எஸ்டிஎல் செய்திமடல்

என்எஸ்டிஎல்லின் பல்வேறு தயாரிப்புகள் / சேவைகள் மற்றும் டெபாஸிட்டரிலுள்ள மற்ற முக்கிய அம்சங்களைப் பற்றி முதலீட்டாளர்கள் மற்றும் டீமேட் கணக்கு வைத்திருப்பவர்களுக்கு சமீபத்திய செய்திகளை தெரிவிக்கவே ஒரு மாத செய்திமடல் 'தி ஃபைனான்சியல் காலீடோஸ்கோப்' (‘The Financial Kaleidoscope’)யைவெளியிடுகிறது. https://nsdl.co.in/e-newsletter.php.

இல்உங்கள் மின்னஞ்சல் ஐடியை வழங்குவதன் மூலம் நீங்கள் பதிவு செய்யலாம் .

இந்த செய்திமடலின் அனைத்து முந்தைய விடயங்கள் உங்கள் டீமேட் கணக்க பக்கம் வாசிப்புக்கு https://nsdl.co.in/publications/nest.php இல் கிடைக்கிறது .

## குறைகளை தீர்த்தல்

செபி மற்றும் என்எஸ்டிஎல் ஆகிய இருவரும் ஒரு முதலீட்டாளரின் புகார்களை அல்லது குறைகளை தீர்க்க முறையான ஒரு வழியினை வைத்திருக்கிறார்கள். எந்த பிரச்சனையோ அல்லது புகாரையோ உங்கள் பங்கு வர்த்தகர் / டிபீக்கு முதலில் எடுத்துச் செல்லுங்கள். உங்கள் பங்குவர்த்தகர் / டிபியின் தொடர்பு விவரங்கள் அவர்களால் வழங்கப்பட்ட ஆவணங்களில் அல்லது அவர்களின் வலைத்தளங்களில் காணலாம். அவர்கள் வழங்கிய தீர்மானத்தில் நீங்கள் திருப்தி அடையா விட்டாலலோ அல்லது சீக்கிரத்தில் எந்தவொரு தீர்மானத்தையும் வழங்காவிட்டால், நீங்கள் அந்த விஷயத்தை சம்மந்தப்பட்ட பங்குச் சந்தை அல்லது டெபாஸிட்டரிக்கு எடுத்துச் செல்லலாம். மாற்றாக, நீங்கள் அதை செபிக்கும் ஆன்லைன் மூலமாக அனுப்பலாம் இந்த முகவரியில் https://scores.gov.in/scores/Welcome.html.

இந்த கையேட்டில் கொடுக்கப்பட்ட தபால் முகவரியில் உங்கள் டீமேட் கணக்கு தொடர்பான சிக்கல்கள் / புகார்களைப் பொறுத்து நீங்கள் என்எஸ்டிஎல்லுக்கு எழுதலாம்.

# முதலீட்டாளர்களை மையமாக வைத்த மற்ற சேவைகள்

## தேசிய ஆற்றல்கள் ரிஜிஸ்டரி (என்எஸ்ஆர்)

என்எஸ்ஆர் (NSR) என்பது இந்திய ஐடி மற்றும் ஐடிஇஎஸ்(Indian IT & ITeS) /பிபிஓ (BPO) தொழிற்துறையின் தற்போதைய மற்றும் வருங்கால ஊழியர்களைப் பற்றிய தகவல்களை அடிப்படையாகக் கொண்ட வலை அடிப்படையிலான அமைப்பு. இது ஒரு நாஸ்காம் ( NASSCOM) முன்முயற்சியாகும். கூடுதல் விவரங்களுக்கு இங்கு தொடர்பு கொள்ளவும். https://naonalskillsregistry.com/.

## கேஒய்சி பதிவு ஏஜென்ஸி (கேஆர்ஏ)

முதலீட்டாளர்களின் மையப்படுத்தப்பட்ட கேஒய்சி பதிவுகள் பதிவேற்ற மற்றும் பதிவிறக்க செய்ய. கூடுதல் விவரங்களுக்கு இங்கு தொடர்பு கொள்ளவும். https://kra.ndml.in/.

## தேசிய அகாடமிக் டெபாஸிட்டரி (என்ஏடி)

மாணவர்கள், சரிபார்ப்பவர்கள் மற்றும் கல்வி நிறுவனங்களால் அணுகக்கூடிய டிஜிட்டைஸ் முறைப்படுத்தப்பட்ட உண்மையான கல்வி சான்றிதழ்கள். கூடுதல் விவரங்களுக்கு இங்கு தொடர்பு கொள்ளவ https://nad.ndml.in/.

## என்ஐஆர் கணக்கு (இ-காப்பீடு கணக்கு)

காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையத்தின்(ஐஆர்டிஏஐ) டிமேட் கணக்கு பக்கம் [Insurance Regulatory and Development Authority of India (IRDAI)] சார்பாக என்டிஎம்எல்(NDML) தேசிய காப்பீட்டு நிரப்பியை(என்ஐஆர்)[National Insurance Repository (NIR)] அமைத்துள்ளது. அனைத்து வகையான காப்பீட்டுக் கொள்கைகள் ஒரு மின்னணு மின்னஞ்சலில் ஒற்றை மின்சுமைக் கணக்கு(இ-ஐஏ) [e-Insurance Account(e-IA)] இல் வைத்திருப்பதோடு அனைத்து காப்பீட்டு கொள்கைகளையும் ஒரே நுழைவுடன் அணுகுவதற்கான வசதியை அளிக்கிறது. இந்த கணக்கு இலவசமாக திறக்கப்படலாம். மேலும் செய்திகளுக்கு தயவுசெய்து பின்வரும் முகவரிக்கு செல்க https://www.nir.ndml.in/.

.

என்எஸ்டிஎல் டேட்டாபேஸ் மேனேஜ்மெண்ட் லிமிடெட் (என்டிஎம்எல்) [NSDL Database Management Limited (NDML)]மூலம் வழங்கப்படும் சேவைகள் 100% என்எஸ்டிஎல் நிறுவனத்தினதாகும்.

## என்எஸ்டிஎல்லை தொடர்பு கொள்ளவும்

- எதாவது கேள்வி அல்லது புகார் - https://www.epass.nsdl.com/epass/complaints/websitec omplaints.aspx
- மின்னஞ்சல் ஐடி குறைகள் / புகார்களுக்கு - relations@nsdl.co.in

- மின்னஞ்சல் ஐடி மற்ற தகவல்களுக்கு / விளக்கங்களுக்கு -info@nsdl.co.in

- டிமேட் கணக்கு வைத்திருப்பவர்களுக்கான இலவசக் கட்டணம் - 1800 222 990

**என்எஸ்டிஎல் அலுவலகங்கள்**

| | |
|---|---|
| தலைமை அலுவலகம் | டிரேட் வொர்ல்டு, ஏ பிரிவு,<br>4வது மாடி, கமலா மில்ஸ் காம்பௌண்ட்,<br>லோவர் பரேல், மும்பை - 400013<br>தொலைபேசி - (022) 24994200 |
| | |
| கிளை அலுவலகங்கள் | |
| | |
| அகமதாபாத் | பிரிவு எண் 407, 4 வது மாடி,<br>3வது ஐ ஒன் கமர்ஷியல் காம்ப்ளெக்ஸ் கோ ஆபரேட்டிவ் சோசைட்டி லிமிடெட், சி.ஜி. |
| டிமேட் கணக்கு | சாலை, பக்கம்<br>பஞ்ச்வட்டி வட்டம்<br>அருகே,<br>அகமதாபாத் -<br>380006<br>தொலைபேசி - (079) 26461376 |
| பெங்களூரு | அலுவலகம் எண் 106,<br>டிபிஎஸ் ஹவுஸ்<br>26, கன்னிங்காம்<br>ரோடு,<br>பெங்களூரு -<br>560052<br>தொலைபேசி - (080) 40407106 |
| சென்னை | 6A, 6 வது மாடி, கென்ஸஸ் டவர்ஸ், # 1 ராம்க்ரிஷ்னா தெரு,<br>வடக்கு உஸ்மான் சாலை,<br>டி. நகர், சென்னை - 600017<br>தொலைபேசி-( 044 ) 2814 3917 / 11 |
| | |

| | |
|---|---|
| ஹைதராபாத் : | அலுவலகம் எண் 123,<br>ஹைதராபாத் ரெகுஸ் மிட் டவுன்,<br>1 வது மாடி, மிட் டவுன் பிளாசா,<br>சாலை எண் 1, பஞ்ஜாரா<br>ஹில்ஸ், ஹைதராபாத் -<br>500033<br>தொலைபேசி - (040) 44334178 |
| | |
| கொச்சி | சூட் எண் எஸ் - 105, மோன்லஷ்<br>பிசினஸ் சென்டர், 4 வது மாடி,<br>க்ரெஸ்ஸென்ஸ் கோபுரம்,<br>என்ஹெச் 47, சங்கம்பூழா நகர்<br>போஸ்ட், கொச்சி - 682033<br>தொலைபேசி - (0484) 2933075 |
| | |
| கொல்கத்தா | அலகு 2E, 2 வது மாடி, தி மில்லேனியம், 235/2 ஏ, ஏஜேசி போஸ் சாலை,<br>போஸ் சாலை,<br>கொல்கத்தா - 700020<br>தொலைபேசி - (033) 22904243<br>(033) 22904246 |
| | |

| | |
|---|---|
| புது தில்லி : | பிரிவு எண் 601, 603, 604,<br>6 வதுமாடி,டவர் - ஏ,<br>நவ்ராங்ஹவுஸ்,<br>கஸ்தூர்பா காந்தி<br>மார்க், கெனாட்<br>பிளேஸ்,<br>புது தில்லி - 110001<br>தொலைபேசி - (011) 23353814<br>(011) 23353815 |



## பயனுள்ள லிங்குகள்

http://www.ncfe.org.in/

https://investor.sebi.gov.in/ https://www.irdai.gov.in/ https://www.nis

m.ac.in/

https://www.pfrda.org.in/index1.cshtml?lsid=854 https://www.rbi.org.in/FinancialEducation/Home

.aspx ww www.nsdl.co.in

## பயன்படுத்தப்பட்ட சுருக்கங்கள்

| | |
|---|---|
| பிஎஸ்டிஏ | பேசிக் சர்வீஸஸ் டீமேட் அகௌண்ட் |
| பிஎஸ்இ | பிஎஸ்இ லிமிடெட் (முன்னாளில் பம்பாய் ஸ்டாக் எக்ஸ்சேஞ் என்றழைக்கப்பட்டது) |
| சிஏஎஸ் | கான்ஸாலிடேட் அகௌண்ட் ஸ்டேட்மெண்ட் |
| சிகேஒய்எஸ் | சென்டரல் கேஒய்சி |
| சிஆர்எ்ப் | கன்வர்ஷன் ரிக்வஸ்ட் ஃபார்ம் |
| டிஐஎஸ் | டெலிவரி இந்ஸ்டரக்ஷன் ஸ்லிப் |
| டிபி | டெபாஸிட்டரி பார்டிசிபெண்ட் |
| டிஆர்எ்ப் | டீமெட்டரியலைசேஷன் ரிக்வஸ்ட் ஃபார்ம் |
| ஜி- சிஇசி | கவர்மெண்ட் செக்யூரிட்டீஸ் |
| ஐடிஇஏஎஸ் | இண்டர்னெட் பேஸ்டு டீமேர் அகௌண்ட் ஓபனிங் ஸ்டேட்மெண்ட் |
| ஐஇபிஎ்ப் | இன்வெஸ்டர் எஜுகேஷன் அண்டு புரொடக்ஷன் அதாரிட்டி |
| ஐஎ்ப்எஸ்சி | இந்தியன் ஃபைனான்ஷியல் சிஸ்டம் கோட் |
| ஐபிஓ | இனிஷயல் பப்ளிக் ஆபிசர் |
| ஐஆர்டிஏஐ | இன்ஷூரன்ஸ் ரெகுலேட்டரி அண்டு டெவலெப்மெண்ட் அத்தாரிட்டி ஆ்ப் இந்தியா லிமிடெட் |
| ஐஎஸ்ஐஎன் | இண்டர்நேஷனஸ் செக்யூரிட்டீஸ் ஐடின்டி்பிகேஷன் நம்பர் |
| கேஆர்ஏ | கேஒய்சி ரிஜிஸ்ட்ரேஷன் நம்பர் |
| கேஒய்சி | நோ யுவர் கஸ்டமர் |
| எல்ஏஎஸ் | லோன் எகெய்ன்ஸ்ட் ஷேர்ஸ் |
| என்ஏடி | நேஷனல் அகாடெமிக் டெபாஸிட்டரி |
| என்டிஎம்எல் | என்எஸ்டிஎல் டேட்டாபேஸ் மேனேஜமெண்ட் லமிடெட் |
| என்எ்ப்ஓ | நியூ ஃபண்ட் ஆ்பர் |
| என்ஐஆர் | நான் ரிசிடெண்ட் இந்தியன் |
| என்எஸ்டிஎல் | நேஷனல் செக்யூரிட்டீஸ் டெபாஸிட்டரி லிமிடெட் |
| என்எஸ்இ | நேஷனல் ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் ஆ்ப் இந்தியா லிமிடெட் |
| எ[illegible]ணக்கு | நேஷனல் ஸ்கில்[illegible]ிஸ்டரி |
| பிஏஎன் | பெர்மனென்ட் அகௌண்ட் நம்பர் |
| பிஓஏ | பவர் ஆ்ப் அட்டார்னி |
| ஆர்ஆர்எ்ப் | ரீமெட்டிரியலைசேஷன் ரிக்வஸ்ட் |
| ஆர்டிஏ | ரிஜிஸ்ட்ரார் டு ஏன் இஷ்,ஷூ அண்டு ஷேர் டிரான்ஸ்பர் ஏஜென்ட் |
| எஸ்இபிஐ | செக்யூரிட்டீஸ் அண்டு எக்ஸேஞ்ச் போர்டு ஆ்ப் இந்தியா |
| எஸ்ஜிபி | சாவரின் கோல்டு பாண்டு |
| எஸ்ஐபி | சிஸ்டமேட்டிக் இன்வெஸ்ட்மெண்ட் பிளான் |
| எஸ்எல்பிஎஸ் | செக்யூரீட்டீஸ் லென்டிங் அண்டு பாரோயிங் ஸ்கீம் |
| எஸ்எம்எஸ் | ஷார்ட் மெசேஜ் சர்வீஸ் |

இந்த வெளியீடு என்எஸ்டிஎல் முதலீட்டு பாதுகாப்பு ஃபண்ட் அறக்கட்டளையின் முயற்சியின் பயனாக வெளியிடப்பட்டுள்ளது.

பொறுப்புத்துறப்பு- முதலீட்டாளர்களின் பொதுவான நலனை மனத்தில் கொண்டு இந்த கையேடு தயாரிக்கப்பட்டுள்ளது. இதிலுள்ள செய்திகள் பல்வேறு தரப்புகளிலிருந்து வந்த செய்திகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டது மற்றும் இந்த கையேட்டிலுள்ள விஷயங்களின் அடிப்படையில் முதலீடு முடிவுகளை எடுப்பதோ மற்றும் / சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்காகவோ

ஏற்படுத்தப்படவில்லை. செயல்படுத்தக்கூடிய அனைத்து விதிகள் மற்றும் கட்டளைகள் இதில் சேர்க்கப்படவில்லை. வாசகர்கள் இந்தக் கையேட்டை பொதுவாக விஷயங்களை தெரிந்து கொள்வதற்காக மட்டுமே பயன்படுத்தும்படி அறிவுறுத்தப்படுகிறார்கள். என்எஸ்டிஎல் பற்றியக் கூடுதல் விபரங்களுக்கும் மற்றும் அதன் சேவைகளுக்கும் www.nsdl.co.in. ஐ அணுகவும்.

இந்த கையேட்டில் ஏதேனும் தவறோ அல்லது செய்திகளில் துல்லியத்தன்மை இல்லாதிருப்பதை நீங்கள் கண்டால் தயவு செய்து எழுத்து வடிவத்தில் info@nsdl.co.in. என்ற எங்களுடைய முகவரிக்கு கொண்டு வாருங்கள்.

வடிவம் -1.2. மார்ச் 2019